بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 25

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - முஹர்ரம் - 02

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - இஹ்ஸான் 18 ★ 18 ஜீன் 2026


## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَهۡلَ الۡكِتٰبِ قَدۡ جَآءَكُمۡ رَسُوۡلُنَا يُبَيِّنُ لَـكُمۡ كَثِيۡرًا مِّمَّا كُنۡتُمۡ تُخۡفُوۡنَ مِنَ الۡكِتٰبِ وَيَعۡفُوۡا عَنۡ كَثِيۡرٍ ؕ قَدۡ جَآءَكُمۡ مِّنَ اللّٰهِ نُوۡرٌ وَّكِتٰبٌ مُّبِيۡنٌ

வேதத்தையுடையவர்களே! நம்முடைய தூதர் உங்களிடம் வந்து விட்டார். வேதத்திலிருந்து நீங்கள் மறைத்தவற்றுள் பெரும்பாலானவற்றை அவர் உங்களுக்கு விளக்குகின்றார். பெரும்பாலான குற்றங்களையும் மன்னிக்கின்றார். நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளியும், மிகத் தெளிவான ஒரு வேதமும் வந்துள்ளன. (5:16)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபிமொழி**

## சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்திற்கான இஸ்லாத்தின் உலகளாவிய தூதுச் செய்தி

அபூ நழ்ரஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மினாவின் நாட்களில் நிகழ்த்திய அந்த இறுதிப் பேருரையைக் கேட்ட ஒருவர் என்னிடம் இதனைக் கூறினார்: 'அன்னார் (ஸல்) தமது அந்தப் பேருரையில் கூறினார்கள்: மக்களே! நிச்சயமாக உங்கள் இறைவன் ஒருவன் ஆவான். உங்களுடைய தந்தை ஒருவரே. நினைவில் கொள்ளுங்கள்! எந்த ஓர் அரபியருக்கும் அரபியல்லாதவரை விடவோ, எந்த ஓர் அரபியல்லாதவருக்கும் அரபியரை விடவோ எந்தச் சிறப்பும் இல்லை. அதே போன்று, எந்த ஒரு சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தவருக்கும் கருப்பு நிறத்தவரை விடவோ, மேலும் எந்த ஒரு கருப்பு நிறத்தவருக்கும் சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தவரை விடவோ எந்த மேன்மையும் இல்லை. ஆயினும், இறையச்சம் மற்றும் திறமையும் முன்னுரிமை மற்றும் மேன்மைக்கு காரணியாக இருக்கும். நான் இந்த முக்கியமான தூதுச் செய்தியை மக்களுக்கு எட்ட வைத்து விட்டேனா? (என்று உரத்த குரலில் கேட்டார்கள்). அதற்கு, 'ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த உண்மையான தூதுச் செய்தியை மிகச் சிறப்பாகச் சேர்த்துவிட்டார்கள்' என்று மக்கள் கூறினர். அடுத்து, 'இது எந்த நாள்?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். மக்கள், '(ஹஜ்ஜுடைய நாட்களில்) மிகவும் கண்ணியத்திற்குரிய நாள்' என்று பதிலளித்தார்கள். அடுத்து, 'இது எந்த மாதம்?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, '(துல்ஹஜ் மாதத்தின்) மிக கண்ணியத்திற்குரிய மாதம்' என்று மக்கள் பதிலளித்தனர். அடுத்து, 'இது எந்த நகரம்?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, '(மக்காவின்) மிக கண்ணியத்திற்குரிய நகரம்' என்று மக்கள் பதிலளித்தனர்.

அப்போது, அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'நிச்சயமாக உங்களுடைய உயிர்களும், உங்களுடைய உடைமைகளும் (அறிவிப்பாளர் கூறுகிறார்: அன்னார் (ஸல்) கண்ணியத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்களா? இல்லையா என்பது எனக்கு நினைவில்லை) இதேபோன்று கண்ணியமிக்கவையும் புனிதமானவையுமாகும். இந்த நாளும், இந்த மாதமும், இந்த நகரமும் எவ்வாறு புனிதமானவையோ (அதாவது இவற்றை நீங்கள் அவமதிப்பதை எவ்வாறு நினைத்து கூட பார்க்க

**இதன் தொடர்ச்சி 10- ம் பக்கம்..**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

## இறைவனின் பார்வையில் குலம் கோத்திரத்திற்கு எந்த மதிப்பும் இல்லை

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'அல்லாஹ்வின் முன்னிலையில் உங்களில் மிகவும் கண்ணியமானவர் எவரெனில், உங்களில் யார் அதிக இறையச்சம் உடையவராக இருக்கிறாரோ அவரே ஆவார். நான் ஸய்யிது ஆவேன்; அல்லது முஹலாயன் ஆவேன்; அல்லது பதான் ஆவேன்; அல்லது ஷேக் ஆவேன் என்பதெல்லாம் முற்றிலும் பொய்யான விஷயங்களாகும். யாராவது ஒருவர் இனத்தின் மீது மிகவும் பெருமை கொள்வார் என்றால், அது முற்றிலும் வீண் பெருமையாகும். மரணத்திற்குப் பிறகு இந்த அனைத்து இன அடையாளங்களும் அழிந்து விடுகின்றன.

இறைவனின் முன்னிலையில் இனத்திற்கு எந்த மதிப்பும் இல்லை. மேலும், எந்தவொரு மனிதனும் ஒரு சிறந்த குடும்பத்தில் பிறந்த காரணத்தினால் மட்டும் இரட்சிப்பு பெற்று விட முடியாது..' இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: ஃபாத்திமாவே! இறைத் தூதரின் மகள் ஆவேன் என்று நீ பெருமை கொள்ளாதே!. இறைவனின் பார்வையில் குலத்திற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. அங்கு அந்தஸ்துகள் இறையச்சத்தின் அடிப்படையிலேயே கிடைக்கின்றன. இந்தக் குலங்களும், கோத்திரங்களும் உலகை அடையாளம் காண்பதற்கான ஒரு நடைமுறை ஏற்பாடு மட்டுமே ஆகும். இறைவனுடன் இவற்றிற்கு எந்தத் தொடர்பும் இல்லை. இறைவனின் அன்பு இறையச்சத்தினால் பிறக்கிறது, மேலும், இறையச்சம் மட்டுமே உயர் அந்தஸ்துகளை அடைவதற்குக் காரணியாக அமைகின்றது.'

(அல்-ஹகம், தொகுதி 6, எண் 37, 17, அக்டோபர் 1902, பக்கம் 7)

* * * * * * * * * *

**தஃப்ஸீரே கபீரிலிருந்து**

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிறிஸ்தவ கோத்திரத்தாருக்கு மஸ்ஜிதில் வழிபட அனுமதி நல்கினார்கள்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், இஸ்லாத்தின் ஸ்தாபகரான ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மத சகிப்புத்தன்மையைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மத சகிப்புத்தன்மையை மிகவும் வலியுறுத்தி வந்தார்கள், மேலும் இது குறித்த மிக உயர்ந்த முன்மாதிரியைத் தாமும் வெளிப்படுத்தினார்கள். ஏமனிலிருந்து ஒரு கிறிஸ்தவ கோத்திரத்தார் அன்னாருடன் மார்க்க ரீதியிலான கருத்துப் பரிமாற்றம் செய்வதற்காக வந்திருந்தனர். அதில் அவர்களின் பெரும் பெரும் பாதிரிமார்களும் இருந்தனர். மஸ்ஜிதில் அமர்ந்து உரையாடல் தொடங்கியது; உரையாடல் நீண்டு விட்டது.

அப்போது, அந்தப் பயணக் குழுவின் பாதிரியார் கூறினார்: 'தற்போது எங்கள் இறை வணக்கத்திற்கான நேரம் ஆகிவிட்டது, எனவே நாங்கள் வெளியே சென்று எங்கள் இறை வணக்கத்தை நிறைவேற்றிவிட்டு வருகிறோம்' என்று கூறினார்.

அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ' வெளியே செல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கின்றது? எங்கள் மஸ்ஜிதிலேயே உங்களது இறை வணக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்; எல்லாவற்றிற்கும் மேலாக, எங்களது மஸ்ஜிதோ இறைவனை நினைவுகூர்வதற்காகவே கட்டப்பட்டுள்ளது' என்று கூறினார்கள்.' (தீபாச்சா தஃப்ஸீருல்-குர்ஆன், பக்கம் 404)

* * * * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

**அமைதி கருத்தரங்கு - 2026 மே 16 பிரிட்டன்**

**ஹுஸூர் அன்வர் அவர்கள் வழங்கிய அமைதி நீதி மற்றும் பரஸ்பர மரியாதைக்கான**

**தூதுச் செய்தியானது முழு உலகிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது**




2025ஆம் ஆண்டிற்கான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் **அமைதி விருதுக்கு** தகுதியானவராக பெனின் ஆஃப்ரிக்காவைச் சேர்ந்த Grégoire Ahongbonon தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேற்கு ஆஃப்ரிக்காவில் மனநோய்களால் பாதிப்புக்குள்ளான நபர்களின் பராமரிப்பு அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்த அவரது முயற்சிகளைப் பாராட்டி இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது. சம்பந்தப்பட்ட நபரின் முயற்சிகள் குறித்த ஒரு சுருக்கமான ஒளிப்பதிவும் காண்பிக்கப்பட்டது. அதன் பிறகு, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அருளுக்குரிய கரங்களால் விருதையும், பத்தாயிரம் பவுண்டுகளுக்கான பரிசுச் காசோலையையும் அவர் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர், அவர் மேடைக்கு வந்து ஃபிரெஞ்சு மொழியில் உரையாற்றினார், அதன் சரளமான ஆங்கில மொழிபெயர்ப்பும் முன்வைக்கப்பட்டது. விருது வழங்கியதற்காக அவர் தனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மனநல நோயாளிகளின் கஷ்டங்களைக் குறித்தும் குறிப்பிட்டார். இறுதியாக, அவர் ஹுஸூர் அன்வர் அவர்களுக்கும், அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கும் நன்றி தெரிவித்தார்.

**வரவேற்புரை மற்றும் முக்கிய விருந்தினர்களின் சுருக்கமான உரைகள்**

ஹுஸூர் அன்வர் அவர்களின் உரைக்கு முன்பாக, மதிப்பிற்குரிய அமீர் ஸாஹிப் யூ.கே அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். மேலும் சில கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் சுருக்கமான உரைகளை நிகழ்த்தினர், அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

**மதிப்பிற்குரிய ரஃபிக் அஹ்மது ஹயாத் ஸாஹிப் அவர்களின் வரவேற்புரை**
**(அமீர் ஜமாஅத் அஹ்மதிய்யா யூ.கே)**

மதிப்பிற்குரிய அமீர் ஸாஹிப் அவர்கள் அனைவரையும் வரவேற்ற பிறகு கூறினார்கள்:

இன்று இங்கு வாழ்வின் பல்வேறு துறைகள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த அன்பர்கள் ஒன்று கூடியுள்ளனர். உலகில் அமைதியை நிரந்தரமாக நிலைநாட்ட நாம் விரும்பினால், நாம் அனைவரும் இணைந்து ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர மரியாதையை ஊக்குவிக்க வேண்டும்.

தற்போது உலகம் மிகவும் இக்கட்டான மற்றும் ஆபத்தான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. உலகின் பல பகுதிகளில் அமைதியின்மையும், மோதல்களும் காணப்படுகின்றன. அப்பாவி குழந்தைகள் உயிரிழக்கின்றன, மேலும் சமுதாயங்கள் ஒன்றுக்கொன்று கருத்து வேறுபாடுகள் மற்றும் மோதல்களில் ஈடுபட்டுள்ளன.

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பிரிட்டிஷ் நாடாளுமன்றம், ஐரோப்பிய நாடாளுமன்றம், வாஷிங்டன் டி.சி.யில் உள்ள கேபிடல் ஹில், கனடா நாடாளுமன்றம், டச்சு நாடாளுமன்றம் மற்றும் நியூஸிலாந்து நாடாளுமன்றம் உள்ளிட்ட உலகின் பல முக்கிய மன்றங்களில் அமைதி மற்றும் நீதி குறித்து உரைகளை நிகழ்த்தியுள்ளார்கள்.

அதேபோல், ஹுஸூர் அன்வர் அவர்கள் உலகத் தலைவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கடிதங்களையும் எழுதியுள்ளார்கள்; அதில் உலகம் மேலும் அழிவை நோக்கி முன்னேறாமல் இருக்க அவர்கள் நீதியை நிலை நாட்ட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

இன்றைய இந்த ஆபத்தான காலகட்டத்தில், உலகில் நிச்சயமற்ற தன்மையும், அச்சமும் அதிகரித்து வரும் நிலையில், ஹுஸூர் அன்வர் அவர்களின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் நீதிக்கான தூதுச் செய்தி முன்பை விட இப்போது மிகவும் அவசியமானதாகவும், உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டியதாகவும் உள்ளது.

பெண்களே! பெரியோர்களே! வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடம் என்னவென்றால், ஹுஸூர் அன்வர் அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டுவது போல, நீடித்த அமைதியை அதிகாரத்தின் மூலம் நிலைநாட்ட முடியாது; மாறாக, உண்மையான மற்றும் நிலையான அமைதி என்பது தூய நீதி, நேர்மை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் மூலமாக மட்டுமே சாத்தியமாகும்.

நாம் ஓர் அமைதியான உலகத்தைக் காண விரும்பினால், நீதி என்பது அனைத்து மக்களுக்கும் மற்றும் அனைத்து சமுதாயங்களுக்கும் சமமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

எல்லாம் வல்ல இறைவன் மனிதகுலத்திற்கு அமைதி, நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான பாதையைக் காட்டுவானாக! ஆமீன்!

Greg Stafford MP for
Farnham and Bordon

இந்த தேசிய அமைதி கருத்தரங்கில் உங்களுடன் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், அதுவும் பிரிட்டன் மட்டுமின்றி உலகம் முழுவதும் இருந்து வருகை தந்துள்ள விருந்தினர்களை எனது தேர்தல் தொகுதிக்கு வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டு கருத்தரங்கத்தின் கருப்பொருள் 'முழுமையான உலகளாவிய நீதி : உண்மையான அமைதிக்கான அடித்தளம்' என்பதாகும். இதைவிட பொருத்தமான நேரத்தில் இது நடந்திருக்க முடியாது. உலகம் முன்னெப்போதையும் விட அதிகமாகப் பிளவுபட்டும், நிச்சயமற்ற நிலையிலும், துன்பத்திலும் மூழ்கியிருக்கும் இத்தகையதொரு நேரத்தில், இது போன்ற கூட்டங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதன் காரணத்தாலும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் செயலாளராக இருப்பதன் அடிப்படையிலும், இந்த ஜமாஅத் குறிப்பாக உள்ளூர் அளவில் எத்தகைய மக்கத்தான சேவைகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை நேரில் பார்க்க எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. என்னை எப்போதும் தாக்கத்திற்குள்ளாக்கிய ஒரு விஷயம் என்னவென்றால், இங்கே அமைதி என்பது ஒரு வெறும் தத்துவக் கோட்பாடாகவோ அல்லது முழக்கமாகவோ கருதப்படுவதில்லை; மாறாக அது நடைமுறையில் செயல்படுத்தப்படுகிறது. சேவை, தொண்டு மற்றும் மனிதர்களை

இதன் தொடர்ச்சி 11- ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய நற்பண்புகளான உண்மை நேர்மை மற்றும் இறையச்சம் ஆகியவற்றின் ஒளியில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 ஏப்ரல் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **24 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாய்மையின் உயர்தரம் தொடர்பான அன்னாருடைய அழகிய முன்மாதிரி, நம்பிக்கையாளர்களுக்கான அறிவுரை மற்றும் வழிகாட்டல் ஆகியவை தொடர்பாக கடந்த குத்பாவில் எடுத்துரைக்கப்பட்டிருந்தது. அது குறித்து இன்றும் கூடுதலாக சிலவற்றை எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மை வாய்மையின் எந்த உயர்தரமான நிலைக்குக் கொண்டு செல்ல விரும்புகிறார்கள் என்பது குறித்து ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஃப்ஸ் பின் ஆஸிம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தான் கேள்விப்படும் எல்லாவற்றையும் பிறரிடம் கூறிக் கொண்டு திரிவதே ஒரு மனிதன் பொய்யன் என்பதற்கு போதுமான சான்றாகும். (ஸஹீஹ் முஸ்லிம், முகத்திமா, பாடம்: கேட்பதையெல்லாம் கூறுவதைத் தடுத்தல், ஹதீஸ்: 05)

இப்போது பாருங்கள்! இந்த வழக்கம் பொதுவாக மக்களிடையே காணப்படுகிறது. ஜமாஅத்திலும் சில நபர்களிடம் இந்தத் தீமை மிக அதிகமாகவே உள்ளது. ஒருவரைப் பற்றி எழுதும்போது, 'அவர் இப்படிச் செய்தார்; அப்படிச் செய்தார்' என்று சில மக்கள் எனக்கும் எழுதிவிடுகின்றனர். அது குறித்து விசாரிக்கும்போது விஷயம் தவறானது என்று தெரிய வருகிறது. உங்களுக்கு இதை யார் சொன்னது? அந்த விஷயம் தவறானது என்று எழுதியவரிடம் கேட்கும்போது, 'நாங்கள் கேள்விப்பட்டோம் என்று கூறிவிடுகின்றனர். மேலும் இவ்வாறு கேள்விப்பட்டதை உடனே அவர்கள் உலகில் கூச்சலிட்டு விடுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இத்தகையவர்களைப் பொய்யர்கள் என்று அறிவித்துள்ளார்கள் என்பதை அத்தகைய மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளுக்கு, பொய் பேசுவதை விடவும் மிகவும் வெறுக்கத்தக்க குணம் வேறு எதுவும் இருந்ததில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னிலையில் யாராவது ஒரு நபர் பொய் பேசிவிட்டால், அந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் இருக்கும். இவர் பொய் பேசியுள்ளார் என்று அன்னாருக்கு தெரிந்து விடும். மேலும் அன்னாருக்கு அதனால் மிகுந்த வேதனை ஏற்படும்; மேலும், அதனை உணர்ந்து வருவார்கள். மேலும், அவர் தவ்பா செய்து விட்டார்; மேலும் தன் தவறைத் சீர்திருத்திக்கொண்டார்; மேலும், பொய் பேசுவதிலிருந்து முழுமையாக விலகத் துவங்கி விட்டார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உணரும் வரை, அன்னாரது உள்ளத்திலும் அந்த விஷயம் நீடித்திருக்கும்.' (முஸ்னதுல் இமாம் அஹ்மத் பின் ஹன்பல், பாகம்: 8, பக்கம்: 280, ஹதீஸ்: 25698, மக்தபா ஆலமுல் குதுப்)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு பெண் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு ஒரு சகக்களத்தி இருக்கிறார்; அதாவது நான் எனது கணவருக்கு இரண்டாவது மனைவி ஆவேன். நான் எனது கணரின் செல்வத்தில் மிகவும் மனநிறைவை வெளிப்படுத்தினால் அது என் மீது பாவமாக அமையுமா?

அதாவது எனக்கு கணவர் அதிகமாகத் தருகிறார் என்று எனது சகக்களத்திக்கு முன்னால் நான் வெளிப்படுத்தலாமா?; அவர் எனக்கு எதுவும் கொடுக்காமல் இருக்கும் நிலையில் அவர் இதனைக் கொடுத்தார்; அதனைக் கொடுத்தார் என்று வெளிப்படுத்தலாமா? இதன் மூலம் நான் (சகக்களத்தியான) அவரைக் கோபப்படுத்தவும், அவருக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தவும் விரும்புகிறேன்,' என்று அவர் கூறினார்.

அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'எந்த நபர் தனக்குக் கொடுக்கப்படாத ஒரு பொருளைக் கொண்டு தன்னைத் திருப்தியடைந்தவனாகக் காட்டிக் கொள்கிறாரோ அவர் எத்தகைய நபர் என்றால், பொய்யான இரண்டு ஆடைகளை அணிந்தவர் ஆவார்.' ஏனெனில் அவருக்கு உணர்வுப் பூர்வமான வேதனையைக் கொடுக்கக் கூடிய மற்றும் கோபப்படுத்தக் கூடிய விஷயத்தை அவர் கூறியுள்ளார்.

எவ்வாறிருப்பினும், இது முற்றிலும் தவறாகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் லிபாஸ் வஸ்ஜீனா, பாடம்: அத் தவ்ஸீர், பாகம்: 11, பக்கம்: 233, ஹதீஸ்: 3959, நூர் ஃபவுண்டேஷன்)

இதன் விளக்கவுரையில் எழுதப்பட்டுள்ளது: இங்கு 'ஆடை' என்ற வார்த்தை ஓர் உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் என்னவென்றால், அந்த நபர் பொய் மற்றும் ஏமாற்று வேலைகளில் ஈடுபடக் கூடியவர் ஆவார். அவர் பொய்யான இரண்டு ஆடைகளை அணிந்திருக்கின்றார். ஒன்றை மேலாடையாக அணிந்திருக்கின்றார்; மற்றொன்றைக் கீழாடையாக ஆக்கியிருக்கின்றார். அதாவது அவர் உச்சி முதல் உள்ளங்கால் வரை பொய்யராக இருக்கிறார். (உம்ததுல் காரி, பாகம்: 20, பக்கம்: 289-290, மக்தபா தாரில் குதுபில் இல்மியா பெய்ரூத், ஃபத்ஹுல் பாரி, பாகம்: 9, பக்கம்: 228-229, மக்தபா தாரர் ரையான் லித்துராஸ்)

எனவே, பொய்யிலிருந்து தப்பிப்பதற்கு மிகவும் நுட்பமாக தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்;

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யாரிடம் நான்கு குணங்கள் இருக்கிறதோ அவர் முழுமையான நயவஞ்சகர் ஆவார். மேலும், யாரிடம் இந்த நான்கு குணங்களில் ஏதேனும் ஒன்று இருக்கிறதோ, அவர் அதை உதிர்க்கும் வரை அவரிடம் நயவஞ்சகத்தின் ஒரு குணம் குடிகொண்டிருக்கும். அவரிடம் ஏதேனும் அமானிதம்

ஒப்படைக்கப்பட்டால், அதில் துரோகம் செய்வார். மேலும், அவர் பேசும்போது பொய் பேசுவார். மேலும், அவர் ஏதேனும் வாக்குறுதி செய்தால், அதை மீறுவார். அவர் யாரிடமாவது விவாதம் அல்லது சண்டையிட்டால், கெட்ட வார்த்தைகளைப் பேசுவார் .'

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் ஈமான், பாடம்: நயவஞ்சகனின் அடையாளங்கள், பாகம்: 1, பக்கம்: 80-81, ஹதீஸ்: 34, நசாரத் இஷாஅத்)

இவை அனைத்தும் ஏதோ ஒரு வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொய்யை நோக்கி இட்டுச் செல்லும் விஷயங்களாகும் அல்லது அவற்றிலிருந்து பொய் வெளிப்படுகின்ற விஷயங்களாகும். இந்த ஒழுக்க பலவீனங்கள் நயவஞ்சகத்தின் அறிகுறிகளாகும். இப்போது நாம் இதை நம் முன்னால் வைத்து, நம்மிடம் இந்த பலவீனங்கள் எந்த அளவிற்கு இருக்கின்றன? என்று நம்மை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். ஏனெனில், இந்த விஷயங்களோ மீண்டும் நயவஞ்சகத்தின் பக்கமே இட்டுச் செல்லக் கூடியவை ஆகும்; மேலும்,தான் நயவஞ்சகன் என்று அழைக்கப்படுவதை மனிதன் ஒருபோதும் விரும்புவதில்லை.

தவறான செய்திகளை பரப்புபவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் எச்சரித்துள்ளார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் ஸம்ரஃ பின் ஜுன்தப் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பெரும்பாலும் தம் ஸஹாபிகளிடம், 'உங்களில் யாராவது ஏதேனும் கனவு கண்டீர்களா?' என்று கேட்டு வந்தார்கள். இதனை அன்னார் (ஸல்) கேட்டு வந்ததாக ஹஸ்ரத் ஸம்ரஃ (ரலி) அவர்கள் கூறினார்கள். தொடர்ந்து அன்னார் (ரலி) கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கேட்கும்போது, அல்லாஹ் நாடியவர்கள் தாங்கள் கண்ட கனவை எடுத்துரைப்பார்கள். அதாவது, யார் கனவு கண்டிருந்தார்களோ, அவர்கள் அதை எடுத்துரைத்து வந்தார்கள்.

ஒரு நாள் அதிகாலை நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இன்றிரவு நான் என்னைக் குறித்து இந்தக் காட்சியைக் கண்டேன். அதாவது இருவர் என்னிடம் வந்து என்னை எழுப்பி, 'எங்களுடன் நடங்கள்' என்று கூறினர். நான் அவர்களுடன் சென்றேன். அப்போது ஒரு நபரைக் கடந்தோம், அவர் மல்லாந்து படுத்துக் கிடந்தார். மற்றொரு நபர் இரும்பு முள்ளை கையில் ஏந்தியவாறு அவர் அருகில் நின்று கொண்டிருந்தார். கொக்கியைப் போன்ற ஒன்றாக இருந்தது. அதனை அவர் பிளேயர் (குறடு) போல பிடித்துக் கொண்டிருந்தார். மேலும், அவர் படுத்திருப்பவரின் முகத்தின் ஒரு பக்கமாகச் சென்று, அந்தக் கொக்கியால் அவரது வாயின் ஒரு தாடையை பிடரி வரை கிழித்தார். அவரது மூக்குத் துவாரத்தை பிடரி வரையும், அவரது கண்ணைப் பிடரி வரையும் கிழித்தார். அதாவது முகத்தின் ஒரு பகுதியை முழுமையாகக் கிழித்தார். அதன் பிறகு அவர் அங்கிருந்து நகர்ந்து அடுத்த கன்னத்தை நோக்கிச் சென்றார். முதலில் வலதுப் பக்கம் செய்தார். பிறகு இடதுப் பக்கத்திலும் முந்தைய கன்னத்தில் செய்தது போலவே செய்தார். அவர் இந்தப் பக்கத்தைக் கிழித்து முடிப்பதற்குள், முதலில் கிழிக்கப்பட்ட பகுதி பழையபடி சரியாகியிருந்தது. பிறகு அவர் மீண்டும் அதன் பக்கம் சென்றார்; மேலும், அதே போன்றே செய்து கொண்டிருந்தார். பின்னர், மீண்டும் அதனை அதே போன்று கிழித்துக் கொண்டிருந்தார். ஏனெனில் அது முன்பை போன்று நன்றாக ஆகியிருந்தது.' நான் 'ஸுப்ஹானல்லாஹ்! என்று கூறினேன்.

அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஸுப்ஹானல்லாஹ்; இவ்விருவரும் யார்?' என்று கேட்டார்கள்.

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அதற்கு, அவர்கள் இருவரும் என்னிடம் கூறினார்கள்:

'கேளுங்கள்! நாங்கள் உங்களுக்கு இதன் உண்மைத்துவத்தை கூறுகிறோம்; நீங்கள் எந்த நபரை கடந்து வந்தீர்களோ, மேலும் யாருடைய தாடை, மூக்கு மற்றும் கண் ஆகியவையும் பிடரி வரை கிழிக்கப்பட்டுக் கொண்டிருந்தனவோ, அவர் காலையில் தன் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்று ஒரு பொய்யான விஷயத்தை (வதந்தியைக்) கட்டமைத்து வந்தார்; அது நாலாப் புறமும் சென்றடைந்து விடும்.

(ஸஹீஹ் புகாரி, பாடம்: ஃபஜ்ர் தொழுகைக்குப் பின் கனவு விளக்கம், பாகம் 16, பக்கம் 246 முதல் 252 வரை, ஹதீஸ் எண்: 7047, நஸாரத் நஷ்ர் வ இஷாஅத் வெளியீடு)

**வதந்திகளைப் பரப்பக் கூடிய மற்றும் மக்களைப் பற்றி தவறானக் கூற்றுகளைப் பேசக் கூடியசில நபர்கள் வெறும் தங்களது நாவின் சுவைக்காக அல்லது பொழுதுபோக்கிற்காக விஷயங்களைப் பேசுகின்றனர்.** சில நேரங்களில் சமூகத்தில் ஒருவரை இழிவுபடுத்துவதற்காகவும் விஷயங்கள் பேசப்படுகின்றன., அவருக்கு ஏதேனும் ஒரு வழியில் ஒருவருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காகவும் அத்தகைய பேச்சுகளைப் பேசுகின்றனர். எனவே, இத்தகைய மக்கள் எப்போதும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, இது (அல்லாஹ்வின் முன்னிலையில்) விசாரணைக்குரிய குற்றமாகும். மேலும், அல்லாஹ் அதனைப் பிடிப்பான். மேலும் அதற்குத் தண்டனை வழங்குவான்.

எனவே இது மிகவும் அச்சத்திற்குரிய இடமாகும். மேலும் அதிகளவில் பாவமன்னிப்பு கோருவதற்கான அவசியம் உள்ளது.

அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அன்னார் (ரலி) இந்த அறிவிப்பை ஹஸ்ரத் ஹகீம் பின் ஹிஸாம் (ரலி) அவர்களிடமிருந்து செய்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

விற்பவருக்கும், வாங்குபவருக்கும் தங்களது வியாபார ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளும் உரிமை, அவர்கள் இருவரும் பிரியும் வரை உண்டு. அதாவது, அவர்கள் செய்த வியாபாரத்தை ரத்து செய்யும் அதிகாரம் அவர்கள் பிரியும் வரை இருக்கும். அவர்கள் ஒன்றாக இருக்கும் வரை அதனை செய்து கொள்ள முடியும். ஆனால், பிரிந்து சென்று விடும்போது அந்நேரத்தில் முடியாது. அல்லது அன்னார் (ஸல்) கூறினார்கள்: அவர்கள் பிரிந்து விடும் வரை அந்த உரிமை இருக்கும். ஒருவேளை அவர்கள் இருவரும் உண்மையைப் பேசி, வெளிப்படையாக பேசியிருந்தார்கள் என்றால், அவர்களின் வியாபாரத்தில் பரக்கத் வழங்கப்படும். மாறாக, அவர்கள் இருவரும் உண்மையை மறைத்து, பொய் கூறியிருந்தால், அவர்களின் வியாபாரத்தின் பரக்கத் அழிந்து விடும்.'

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் புயூஃ, பாடம்: இதா பய்யனா வலம் யக்துமா வ நஸஹா, பாகம் 4, பக்கம் 38-39, ஹதீஸ் எண்: 2079, நஸாரத் நஷ்ர் வ இஷாஅத் பதிப்பு)

பல நேரங்களில் வியாபாரச் சண்டைகள் பொய்யை அடித்தளமாகக் கொண்ட பேச்சுகளினாலேயே நிகழ்கின்றன. பின்னர் அல்லாஹ் அத்தகைய மக்களின் பேச்சுகளிலும், வியாபாரங்களிலும் பரக்கத் செய்வதில்லை. இவ்வுலகில் அவர்கள் என்ன இழப்பை சந்திக்க நேரிடுமோ அதனை அவர்கள் சந்திப்பார்கள். அல்லாஹ்விடத்திலும் அவர்கள் பாவிகளாக இருப்பார். மேலும் தண்டையும் பெறுகின்றனர்.

அடுத்து, ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**ஓர் அடியான் பொய் பேசும்போது, அவன் செய்த அந்தச் செயலின் துர்நாற்றம் காரணமாக வானவர் அவரிடமிருந்து ஒரு மைல் தூரம் தள்ளிப் போய்விடுகிறார்.**'(ஜாமிஉத்-

திர்மிதி, கிதாப் அல்-பிர்ரி வஸ்-ஸிலா, பாப் மா ஜாஅ ஃபிய்ஸ்-ஸித்கி வல்-கித்ப், ஹதீஸ்: 1927)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு தானியக் குவியலைக் கடந்து சென்றார்கள். அன்னார் (ஸல்) தம் கரத்தை அந்தத் தானியக் குவியலுக்குள் நுழைத்தபோது, அன்னாருடைய விரல்களில் ஈரம் பட்டது. தானியங்கள் ஈரமாக இருந்தன. அவ்வாறு உணரப்பட்டது. அப்போது, ‘தானியக்காரரே! நீங்கள் விற்பனை செய்கின்ற இந்த தானியங்கள் ஈரமாக இருக்கின்றனவே? இது என்ன விவகாரம்?‘ என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

அது கோதுமையாக இருந்தது அல்லது சோளமாக இருந்தது; அல்லது பார்லியாக இருந்தது அல்லது வேறு ஏதோ இருந்தது. இவை உள்ளே ஈரமாக இருக்கிறதே ; இது என்ன விவகாரம்? என்று கேட்கப்பட்டது.

அதற்கு, ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதில் மழை பெய்துவிட்டது (மழையினால் நனைந்துவிட்டது)‘ என்று அவர் கூறினார். அப்போது, அன்னார் (ஸல்) கூறினானர்கள்: அப்படியென்றால், அதனை நீர் மறைத்து கீழே வைப்பதற்கு பகரமாக ஏன் மேல் பகுதியில் வைக்கவில்லை?

மழை பெய்து விட்டதென்றால், பின்னர் மக்கள் அதனை பார்க்கும் பொருட்டு நீர் மேலே வைத்திருக்க வேண்டும்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: யார் ஏமாற்றுகிறாரோ அவர் என்னைச் சேர்ந்தவர் அல்லர்‘ என்று கூறினார்கள்.(ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான், பாப் கவ்லின் நபி (ஸல்): 'மன் கஷ்ஷனா ஃபலைஸ மின்னா'..., மொழியெர்ப்பு பாகம் 01, பக்கம் 93, ஹதீஸ் 139, நூர் பவுண்டேஷன் பிரசுரம்)

எனவே, வணிகத்தில் ஈடுபடும் மக்களும் இவ்வளவு நுணுக்கமாக பார்க்க வேண்டும். இது எத்தகைய தரம் என்றால், இதனை அன்னார் (ஸல்) ஒரு முஸ்லிமிடம் உருவாக்க விரும்பினார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இன்று முஸ்லிம்களே ஏமாற்று வணிகம் மற்றும் பொய்யின் காரணமாக உலகில் அவப்பெயர் பெற்றுள்ளனர்.

எனவே, இன்று நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது உண்மையான ஈமான் கொண்டிருப்பதாக வாதம் செய்யும்போது, நமது ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் உண்மையின் உயர்ந்த தரம் இருக்க வேண்டும். இல்லையெனில், ‘நீங்கள் இந்தத் தரத்தில் இல்லை என்றால், நீங்கள் என்னைச் சேர்ந்தவர்கள் இல்லை; உங்களுக்கும், எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை‘ என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

உண்மையை மிக நுணுக்கமாக பார்த்தவாறு அதனை மேற்கொள்வதற்கு அன்னார் (ஸல்) எண்ணற்ற அறிவுரைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளார்கள். மேலும், முழுமையாக உண்மையைக் கடைப்பிடிக்காத வரை எந்தவொரு நபரும் உண்மையான முஸ்லிமாக மாற முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அடிப்படையில் நான் இப்போது சில விஷயங்களைச் சமர்ப்பிக்கிறேன்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதும் உண்மை பேசுவதிலும், அமானிதம் மற்றும் நேர்மையிலும் எல்லோரையும் விட சிறப்பானவராக இருந்ததன் காரணத்தால் மக்கள் மத்தியில் அன்னார் (ஸல்) 'ஸித்தீக்' (உண்மையாளர்) மற்றும் 'அமீன்' (நம்பிக்கையாளர்) என்று பிரபலமாக இருந்தார்கள்.

ஆக, ஒரு நூலாசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார்: முஹம்மது (ஸல்) அவர்கள் அறியாமைக் காலகட்டத்தில் தோன்றினார்கள். அன்னாருக்கு முன்னர் அந்த மக்களிடத்தில் எச்சரிக்கை செய்யக் கூடியவர் எவரும் வந்திருக்கவில்லை. அதாவது அவர்களின் சமூகத்திற்குள் எந்தவொரு நபியும் வந்திருக்கவில்லை. மக்கள் சிலைகளையும், உருவங்களையும், தீய சக்திகளையும் வணங்கிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு சிறுவயதிலேயே அந்த மக்களுக்கு மத்தியிலேயே அறிவுத் திறனும், ஞானமும் வழங்கப்பட்டது. அன்னார் (ஸல்) சாத்தானியக் கூட்டத்தினருக்கும், சிலை வணங்கிகளுக்கும் மத்தியில் இருந்தபோதிலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் எந்த ஒரு சிலையிடமும் ஈர்ப்பு கொள்ளவுமில்லை, அந்த மக்களுடன் எந்தவொரு திருவிழாவிலும் பங்கெடுக்கவும் இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஒருபோதும் பொய்யை செவியுற்றதே இல்லை. மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மிகவும் உண்மை பேசுபவர், 'நம்பிக்கைக்குரியவர்', மென்மையானவர் மற்றும் மிகுந்த பரிவு கொண்டவர் என்று கருதி வந்தனர்.

(இம்தஃ அல்-அஸ்மாஃ, பாகம் 4, பக்கம் 212, மக்தபதுல் இல்மிய்யா, பெய்ரூட்)

மாறாக, இஸ்லாத்திற்கு முந்தைய அறியாமைக் காலத்திலும் கூட, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமே தீர்ப்புகள் பெற்றுக் கொள்ளப்பட்டன என்று அறிவிப்பில் வருகிறது. (ஸுபுல் அல்-ஹுதா வர்-ரஷாத், பாகம் 2, பக்கம் 147, மக்தபதுல் இல்மிய்யா, பெய்ரூத்)

இந்த விஷயத்தை ஒரு இடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் . இவ்வாறு : எடுத்துரைத்துள்ளார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்பண்புகள் பற்றி அன்னாரின் சமுதாயம் வழங்கிய ஒட்டுமொத்த சாட்சியம் என்னவென்றால், அன்னாரின் நபித்துவ வாதத்திற்கு முன்பே அன்னாரின் சமுதாயம் அன்னாருக்கு 'அமீன்' மற்றும் 'ஸத்தீக்' என்று பெயர் சூட்டினர். உலகில் எத்தகைய மக்கள் இருக்கின்றனர் என்றால், அவர்களின் நேர்மையின்மைக்கு எந்த ஆதாரமும் கிடைப்பதில்லை. மேலும், எவ்வித சோதனைக் கட்டங்களையும் சந்திக்கும் வாய்ப்பு பெறாத மக்களும் அதிகம் இருக்கின்றனர். ஆயினும், அவர்கள் சாதாரண சோதனைகளைக் கடந்து செல்கின்றனர். மேலும் அவர்களின் அமானிதம் நிலைத்திருக்கிறது. ஆனால், அவ்வாறு இருந்தபோதிலும் அவர்களின் சமூகம் அவர்களுக்கு எந்தவொரு தனித்துவமான பெயரையும் வழங்குவதில்லை. ஏனெனில், ஒரு நபர் ஒரு தனித்துவமான குணத்தில் மற்ற அனைத்து மக்களை விடவும் உயர்ந்து விளங்கும் போது மட்டுமே அவருக்கு ஒரு தனித்துவமான பெயர் என்பது வழங்கப்படுகிறது. போரில் பங்கேற்கும் ஒவ்வொரு வீரரும் தன் உயிரை அபாயத்தில் ஆழ்த்துவதில்லை, ஆனால் ஆங்கிலேய சமுதாயமும் ஒவ்வொரு வீரருக்கும் 'விக்டோரியா கிராஸ்' பதக்கத்தை வழங்குவதில்லை; ஜெர்மன் சமுதாயமும் 'அயர்ன் கிராஸ்' வழங்குவதில்லை. ஃபிரான்சில் அறிவுசார் துறைகளில் ஈடுபடும் இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள், ஆனால் ஒவ்வொருவருக்கும் 'லீஜன் ஆஃப் ஆனர்' (LEGION OF HONOUR) விருது கிடைத்துவிடுவதில்லை.

ஆக, ஒரு நபர் நேர்மையாளராகவும், உண்மையாளராகவும் இருக்கின்றார் என்பதால் மட்டும் அவரது மகத்துவத்தின் மீது தனிச்சிறப்பான ஒளி பாய்ச்சப்படுவதில்லை. ஆனால், ஒரு நபருக்கு ஒட்டுமொத்த சமுதாயமும் அமீன்' (நம்பிக்கையாளர்) மற்றும் ஸித்தீக்' (மிகவும் உண்மையாளர்) என்று பட்டம் சூட்டுவது என்பது ஒரு அசாதாரணமான விஷயமாகும். மக்கத்து மக்கள் அனைத்து இனத்தைச் சேர்ந்தவர்களிலும் ஒருவருக்கு இந்த 'அமீன்' மற்றும் 'ஸித்தீக்' பட்டத்தை வழங்கி வந்தார்கள் என்றால், அப்போதும் கூட அமீன் மற்றும் ஸித்தீக் என்ற பட்டத்தைப் பெறக் கூடியவர் மாபெரும் மனிதராகக் கருதப்பட்டிருப்பார்.

ஆனால், அரபு தேசத்தின் வரலாறு கூறுவது என்னவென்றால், அரபியர்கள் எல்லா இனத்தைச் சார்ந்தவர்களிலும் எந்தவொரு மனிதருக்கும் ஒருபோதும் இத்தகைய பட்டங்களை

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

வழங்கியதே இல்லை. இன்னும் கூறப்போனால், அரபு தேசத்தின் பல நூற்றாண்டுகால வரலாற்றில் ஒரேயொரு உதாரணமாக 'முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உதாரணம் மட்டுமே கிடைக்கின்றது. அன்னாருக்கு அரபு மக்கள் 'அமீன்' மற்றும் 'ஸித்தீக்' என்ற பட்டங்களை வழங்கினர்.

எனவே, அரபு தேசத்தின் பல நூற்றாண்டுகால வரலாற்றில், ஒட்டுமொத்த சமுதாயத்தின் ஒரேயொரு நபருக்கு 'அமீன்' மற்றும் 'ஸித்தீக்' என்று பட்டம் சூட்டியிருப்பது கூறுவது என்னவென்றால், அவரது அமானிதம் மற்றும் அவரது வாய்மை இரண்டும் எந்தளவிற்கு மிக உயர்ந்த தரத்தில் இருந்தது என்பதைக் காட்டுகிறது. அதாவது அவற்றுக்கு நிகரான ஓர் உதாரணத்தை அரபியர்களின் அறிவில் வேறு எந்த நபரிடமும் காணப்படவில்லை. அரபியர்கள் தங்களின் நுட்பமான குணத்தினால் உலகில் தனித்துவமானவர்களாக விளங்கினர். எனவே, எந்த விஷயத்தை அவர்கள் அரிதானதாக குறிப்பிட்டார்களோ அது நிச்சயமாக உலகில் மிகவும் அரிதானதாக கருதப்படுவதற்கு தகுதி வாய்ந்ததாக இருந்தது. (தீபாச்சா தஃப்ஸீருல்-குர்ஆன், அன்வாருல் உலூம், பாகம் 20, பக்கங்கள்: 374-375)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்று உலகத்தின் நிலைமை மிகவும் மோசமடைந்துவிட்டது. எந்தவொரு அம்சம் மற்றும் எந்தவொரு கோணத்தில் பார்த்தாலும் பொய் சாட்சிகள் உருவாக்கப்படுகின்றனர். பொய் வழக்குகள் தொடுப்பது என்பது ஒரு பொருட்டே அல்ல. பொய்யான சான்றிதழ்களும் தயாரிக்கப்படுகின்றன.பொய்யான ஆவணங்களும் உருவாக்கப்படுகின்றன. ஒருவர் ஒரு விவகாரத்தை எடுத்துரைக்கின்றார் என்றால், உண்மையை விட்டு விலகி தந்திரமாகப் பேசுகின்றார்; எதில் லாபம் இருக்குமோ அந்தப் பக்கமாக உண்மையை தவிர்த்து விடுகின்றார்; பொய்யான கூற்றை மேற்கொள்கிறார். இப்போது இந்த இயகத்திற்கு தேவையில்லை என்று கருதக் கூடியவர்களிடம், இது தான் அந்த மார்க்கமா? என்று யாராவது கேட்கட்டும்.

அதாவது, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எந்த ஜமாஅத்தை நான் தொடங்கியுள்ளேனோ அதனை உண்மையின் மீது நிலைத்திருப்பதற்காகத் தொடங்கியுள்ளேன்;

அன்னார் (அலை) கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த மார்க்கத்தைக் கொண்டு வந்தார்களோ, அது இதுதானா? என்று அவர்களிடம் எவராவது கேட்கட்டும். அல்லாஹ்வோ பொய்யை அசுத்தம் என்று கூறி, அதிலிருந்து விலகியிருக்குமாறு கூறியுள்ளான்:

اِجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ

(அல்-ஹஜ்: 31)

சிலை வழிபாட்டுடன் இந்தப் பொய்யானது ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, ஒரு முட்டாள் மனிதன் அல்லாஹ்வை விட்டுவிட்டு, ஒரு சிலையின் பக்கம் சிரம் பணிவது போன்றதாகும். இதன் பொருள் இதுவே ஆகும். அதாவது அசுத்தத்திலிருந்து நீங்கள் ஏன் விலகியிருக்க வேண்டும் என்றால், எவ்வாறு அது ஒரு மிகப் பெரிய தீமையாக உள்ளதோ அதேபோன்று பொய் பேசுவதும் பெரும் தீமையாக உள்ளது. எப்படி நீங்கள் அசுத்தத்தில் விழுந்துவிடுகின்றீர்களோ, தவறான செயல்களில் ஈடுபடுகின்றீர்களோ பொய் பேசுவதும் அப்படிப்பட்டதே ஆகும்.

எனவே அன்னார் (அலை) கூறினார்கள்: சிலை வழிபாடும் தவறான ஒரு செயலாகும். அசுத்தமான வேலையாகும். கூறினார்கள்: சிலை வணக்கத்துடன் இந்தப் பொய் ஒப்பிடப்பட்டுள்ளது. ஒரு முட்டாள் மனிதன் அல்லாஹ்வை விட்டுவிட்டு ஒரு சிலைக்கு முன்னால் குனிந்து வணங்குவதைப் போன்றே, உண்மை மற்றும் நேர்மையை கைவிட்டு விட்டு, தனது சுயநலத்திற்காக மனிதன் பொய்யை ஒரு சிலையாக ஆக்கிக் கொள்கிறான். இதன் காரணமாகத்தான் அல்லாஹ் இதனை சிலை வணக்கத்துடன் இணைத்துள்ளான்; மேலும் அதனுடன் ஒப்பிட்டுள்ளான். மேலும், சிலை வணக்கத்திலிருந்து விலகியிருக்குமாறு கட்டளையிட்டுள்ளான். ஏனெனில், இது ஒரு மாபெரும் பாவமாகும். பொய் பேசுவதும் அதற்கு நிகரானதே ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) கூறுகின்றார்கள்: 'ஒரு சிலை வணங்கி எவ்வாறு அந்தச் சிலையிடமிருந்து இரட்சிப்பை எதிர்பார்க்கின்றாரோ, அதேபோன்று பொய் பேசக் கூடியவரும் தன் தரப்பில் இருந்து சிலையை உருவாக்கிக் கொள்கின்றார்; மேலும், அந்தச் சிலையின் மூலமாக இரட்சிப்பு கிடைக்கும் என்று கருதுகின்றார். எத்தகைய சீரழிவு ஏற்பட்டிருக்கின்றது!

சிலை வழிபாட்டாளர்களிடம் ஏன் சிலையை வணங்குகின்றீர்கள்? என்று கேட்கப்பட்டால், 'இந்த அசுத்தத்தை கைவிட்டு விடுங்கள் என்று அவர்களிடம் கூறினால், எப்படி கைவிட முடியும்? இது இல்லாமல் எங்களால் வாழ முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர்.

'இந்த சிலையின் அசுத்தம், மற்றும் தீமையை கைவிட்டு விடுங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால், 'இதை ஏன் கைவிடுவதில்லை? என்று கேட்கப்பட்டால், இது இல்லாமல் எங்களால் வாழ முடியாது; நாங்கள் எங்களுடைய சுய நலனிற்காக பொய் பேச வேண்டியுள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர்.'

அன்னார் (அலை) மேலும் கூறுகின்றார்கள்: '

பொய்தான் தங்கள் வாழ்க்கையின் அடித்தளமாக இருக்கின்றது என்று அவர்கள் கருதுவதை விட துர்பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்? ஆனால், இறுதியில் உண்மையே வெல்லும்; நன்மையும், வெற்றியும் உண்மைக்கே உரியது என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்'.(மல்ஃபூஸாத் ,பாகம் 8, பக்கம் 181, பதிப்பு: 2022)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

தமக்கு வஹீ அருளப்பட்டுள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் மனைவியிடம் தகவல் கூறிய போது, 'நீங்கள் என்ன இட்டுக் கட்டுகின்றீர்களா? என்று கூறவில்லை. மாறாக அவர் கூறுகின்றார்: 'தாங்கள் (ஸல்) பதற்றம் அடைய வேண்டாம்; தாங்கள் (ஸல்) கண்டவை யாவும் சரியானவையே; அல்லாஹ் தங்களை ஒருபோதும் வீணாக்க மாட்டான். ஏனெனில், தாங்கள் (ஸல்) உறவினர்களை ஆதரிக்கின்றீர்கள்; ஏழைகளின் சுமைகளைத் தாங்குகின்றீர்கள்; தொலைந்துபோன நன்மைகளை நிலைநாட்டுகின்றீர்கள்; விருந்தினர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்கின்றீர்கள்; உண்மைக்கு ஆதரவு அளிக்கின்றீர்கள்'.

அடுத்து, அந்த மனைவி அன்னாரை தமது சகோதரரான 'வர்கா பின் நவ்ஃபல்' என்பவரிடம் அழைத்துச் செல்கின்றார். அவர் இஸ்ராயீல் வேதங்களின் அறிஞராக இருந்தார். அவர் விபரங்களைக் கேட்டபோது, 'இது மூஸா (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட அந்த வஹீயை போன்றதே ஆகும். மேலும், மூஸா (அலை) அவர்களின் வஹீயில் காணப்பட்டதைப் போன்ற கட்டளைகளும், சட்டங்களும் இந்த வஹீயிலும் காணப்படுகின்றன. இதற்கான சான்றுகள் இப்போது நமக்குக் கிடைக்கின்றன' என்று கூறினார்.

நான் இதற்கு முன்பும் ஒருமுறை எனது குத்பாவில் இதனைப் பற்றி சுருக்கமாக எடுத்துரைத்துவிட்டேன்.

பின்னர் அடுத்த சாட்சியத்தை அவர் வழங்குகின்றார். ஒன்று, வரகா பின் நவ்ஃபல் அளித்த சாட்சியம்.

பின்னர் அன்னார் (ரலி) எழுதினார்கள்:

'வீட்டில் ஒரு சிறிய சகோதரர் இருக்கின்றார்; அவர் வாலிப வயதை நெருங்கக் கூடியவராக இருந்தார்; அவரால் இளைஞர்கள் மத்தியில் தப்லீஃக்கில் ஒரு சிறந்த ஊடகமாக மாற முடிந்தது; அவர்




தமது அண்ணன் மற்றும் அண்ணியின், அதாவது ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) ஆகியோரை மிக கவனத்துடன் ஒரு முக்கியமான மாற்றத்தைப் பற்றிய விஷயங்களை கூறியவாறு கேட்கின்றார்; அப்போது மிகுந்த கம்பீரத்துடன் முன்னோக்கி சென்று கூறுகின்றார்:

தாங்கள் (ஸல்) உண்மையாளர் ஆவீர்கள்; நிச்சயமாக தாங்கள் (ஸல்) இறைவனின் புறமிருந்து இந்த விஷயங்களை கூறியுள்ளீர்கள்; மேலும் தங்களை இந்த உலகத்தைச் சீர்திருத்துவதற்காகவே இறைவன் அனுப்பியுள்ளான் என்று நானும் நம்பிக்கை கொள்கிறேன். .‘

ஒரு விடுதலை செய்யப்பட்ட அடிமை சாட்சியம் அளிக்கின்றார். அவர் அன்னாரது நற்பண்புகளால் கவரப்பட்டு தன் சொந்தத் தாய், தந்தையரை விட்டுவிட்டு அன்னாரது வாசலிலேயே அமர்ந்துவிட்டார். மெது மெதுவாக நிகழ்ந்த அந்தப் பேச்சுகளை அவர் கேட்டபோது, மேலும் தன் எஜமானரின் முகத்தில் கவலை மற்றும், அச்சத்தின் அடையாளத்தைக் கண்டபோது, முன்னோக்கி சென்று தன் எஜமானரின் கரங்களைப் பற்றிக்கொண்டு கூறுகிறார்:

‘என் எஜமானரே! தாங்கள் (ஸல்) எதைக் கண்டீர்களோ அதுவே நடக்கும்; தாங்கள் (ஸல்) கூறிய இந்த விஷயம் உண்மையாகும்; தாங்கள் (ஸல்) எதைப் பார்த்தீர்களோ அது உண்மையாகும்; தங்களைப் போன்ற ஒரு மனிதரை இறைவன் கைவிட மாட்டான்;. தாங்களோ உச்சி முதல் பாதம் வரை உண்மையாளர் ஆவீர்கள்; தங்களை வல்லமை எப்படி ஏமாற்ற முடியும்? தங்களது கரங்களால் உலகின் சீர்திருத்தம் நிகழும் அந்த நேரம் வந்துவிட்டது. தங்களுடனேயே இருப்பதற்கும், சேவை செய்வதற்கும் எனக்கும் அனுமதி நல்குங்கள்.‘

ஒரு நெருங்கிய நண்பரின் சாட்சியம் உள்ளது; அவர் ஒரு நெருங்கிய நண்பர் மட்டுமல்ல, ஒரு சிறந்த சாட்சியும் ஆவார். ஒருவகையில் அவர் ‘ஒரே சிப்பிற்குள் வளரக் கூடிய மற்றொரு முத்தாக இருந்தார். அந்த நண்பர், தன் தோழரைப் பற்றி வீணான வதந்திகள் பரப்பப்படுவதைக் கேட்டபோது – அநேகமாக அவரது மூளையில் ஏதோ கோளாறு ஏற்பட்டுவிட்டது என்று ‘மக்கள் கூறுவதை கேள்விப்படும்போது – அவர் ஓடோடிச் செல்கின்றார்; மேலும், கதவைத் திறக்கச் செய்து, ‘நான் கேட்பதெல்லாம் உண்மையா? என்று அவர் கேட்கின்றார். அதற்கு, அன்னார் (ஸல்) அவர் முன்னால் விளக்கமளிக்கத் தொடங்கும்போது, அவர் கூறுகிறார்: இறைவனின் மீது ஆணையாக! சான்றுகளை வழங்காதீர்கள்; இந்த விஷயங்கள் உண்மையா என்று மட்டும் எனக்குக் கூறுங்கள்’; அன்னார் (ஸல்) அதை உறுதிப்படுத்தியதும், அவர் கூறுகிறார்: ‘என் உண்மையான நண்பரே! நான் தங்களுடைய நபித்துவத்தின் மீது ஈமான் கொண்டுவிட்டேன். தாங்களோ ஆதாரங்களைத் தரத் தொடங்கி, எனது ஈமானின் மீது சந்தேகம் கொள்ளத் தொடங்கி விட்டீர்கள்; தங்கள் உண்மைத்துவத்தை நான் எந்தளவுக்குக் கண்டு விட்டேன் என்றால், ஆதாரங்களுக்கான தேவையே எனக்கு இல்லை.‘ பின்னர் அவர் கூறினார்: அதாவது ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) கூறினார்:

‘என் நண்பரே! தங்களது திருமுகத்தைக் கண்ட ஒருவர், தங்கள் வார்த்தைகளில் எப்படி சந்தேகம் கொள்ள முடியும்? எதிர்ப்பு என்பது ஏற்பட்டே தீரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஏனெனில்,

لَمْ يَأْتِ رَجُلٌ قَطُّ بِمِثْلِ مَا جِئْتَ بِهٖ اِلَّا عُوْدِيَ

பொருள்: எந்த நபரெல்லாம் இப்படிப்பட்ட தூதுச் செய்தியைக் கொண்டு வந்தாரோ அவர் மக்களின் எதிர்ப்பை சந்திக்காமல் இருந்ததில்லை என்ற வர்கா பின் நவ்ஃபல் கூறியது முற்றிலும் உண்மையே.‘

ஆனால், வல்ல இறைவனின் திட்டத்தைப் பாருங்கள்; இந்த எதிர்ப்பின் புயல் வருவதற்கு முன்பே, அல்லாஹ் அன்னாருக்கு எவ்வாறு தோழர்களை உருவாக்கி விட்டான். மக்கா வாசிகளில் ஒரேயொரு யூத அறிஞரான வர்கா பின் நவ்ஃபல் முதல் அடியிலேயே அன்னாருக்கு முன்னால் மண்டியிட்டு விட்டார். அன்னாரது வாழ்க்கைத் துணையான ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், வஹீயை பற்றி கேள்விப்பட்ட உடனேயே அன்னாரது கவலைகளைப் போக்கினார்கள். இளம் வயது சகோதரரான அலி (ரலி), அவர் எப்போதும் அன்னாரது குடும்ப நற்பண்புகளைக் பார்த்து வந்தார்; அவர் தன் சேவைகளை சமர்ப்பிக்கத் தொடங்கினார். விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஸைத் (ரலி), அன்னாருடனான கொடுக்கல் வாங்கல் மற்றும் ஏழைகளுடனான அன்னாரது நன்நடத்தையை ஆழமாகவும் நீண்ட காலமாகவும் கவனித்து வந்தார். அவர் அன்னாரது உண்மைத்துவத்தின் மீது சத்தியம் செய்யத் தொடங்கினார். சிறுவயது நண்பரும், மக்காவின் சான்றோரும், கண்ணியத்தின் வடிவமுமான அபூ பக்ர் (ரலி), அன்னார் (ஸல்) வஹீக்கான வாதம் செய்துள்ளார்கள் என்பதை மட்டும் செவியுற்று, தன் கழுத்தில் அடிமைத்தனத்தின் மாலையை அணிந்து கொண்டு அன்னாரது வாசலில் சென்று அமர்ந்தார்.

இந்தப் பற்று மற்றும் அர்ப்பணிப்பின் நிகரற்ற காட்சியின் வெளிப்பாடானது அன்னாரது உள்ளத்தில் எந்த அளவு மகிழ்ச்சியை உருவாக்கியிருக்கும்! மக்கா வாசிகளின் ஏளனங்கள் மற்றும் ஏச்சுப் பேச்சுகளைக் கேட்டு அன்னார் எவ்வாறு புன்னகைத்திருப்பார்கள்! மேலும், ‘என்னை அறியாதவர்கள்தான் என் மீது இவ்வாறு பழிசுமத்துகிறார்கள்‘ என்று அன்னார் (ஸல்) கூறியிருப்பார்கள். ‘என்னை சூனியக்காரன்; பைத்தியக்காரன்; இன்னார்; இன்னார் என்று கூறுகின்றீர்கள். ஆனால், இப்போது என்னை நன்கு அறிந்தவர்கள் என்ன சொல்கிறார்கள்? என்று இந்தத் தீர்ப்பையும் கொஞ்சம் கேளுங்கள்!‘ என்று கூறியிருப்பார்கள். எவ்வாறு உயிர்களை அர்ப்பணித்து அவர்கள் எனது வலப்பக்கமும், இடப்பக்கமும் நிற்கின்றார்கள்! தம் சுமையை சுமப்பதற்காக ஓர் உதவியாளரை வழங்குமாறு இறைவனிடம் மூஸா (அலை) அவர்கள் துஆ செய்தார்கள்.

‘இப்போது இங்கு இந்த வசனத்தின் விளக்கவுரையில் ஒப்பீடு செய்கின்றார்கள். மூஸா (அலை) அவர்களின் தோழர்களுக்கும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழர்களுக்கும் இடையே ஓர் ஒப்பீடு செய்யப்படுகின்றார்கள்.‘ எனவேதான், மூஸா (அலை) அவர்கள் துஆ செய்து தன் சுமையைச் சுமப்பதற்காக ஒரு உதவியாளரைக் கேட்டார்கள் என்ற உதாரணத்தை அன்னார் (ரலி) வழங்கியுள்ளார்கள். ‘ஆனால், இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு, அல்லாஹ் கேட்காமலேயே ஐந்து உதவியாளர்களை வழங்கிவிட்டான்; அதுவும் எத்தகைய உதவியாளர்களை வழங்கினான் என்றால், அவர்கள் சுமையைத் தாங்குவதில் உச்சத்தை தொட்டு விட்டனர்.‘

வர்கா அவர்கள் விரைவில் மரணமடைந்து விட்டார்கள், ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்தின் மீது அவர் ஓர் அழியாத சாட்சியத்தை வழங்கிச் சென்று விட்டார். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வரை, அதன் பிறகு ஒரு பெண்ணாக இருந்து கொண்டு எத்தகைய பணியை செய்து காட்டினார்கள் என்றால், அதைக் கண்டு மாபெரும் வீரர்களின் கண்களும் கூட வியப்பால் தாழ்ந்து விடுகின்றன. ஸைது (ரலி) அவர்கள் இருபது ஆண்டுகள் வரை தியாகத்தின் நிகரற்ற முன்மாதிரியை வெளிப்படுத்தினார்கள், இறுதியில் வாள் வீச்சுகளுக்கு முன்னால் தன் ரத்தத்தை சிந்தி, இறைத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் உதவியாளர் எவ்வாறு இருக்க வேண்டும்? என்பதை நிரூபித்துக் காட்டினார்கள். அபூபக்ர் (ரலி) மற்றும் அலி (ரலி) ஆகியோர் அன்னாரது மறைவுக்குப் பிறகும் இருந்தார்கள்; மேலும், கலீஃபாவாக இருந்து உதவியாளருக்கான ஒரு புதிய பரிமாணத்தின் சான்றை வழங்கிச் சென்று விட்டனர். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 13, பக்கம் 201 - 202, 2023-ம் ஆண்டு பதிப்பு)

அடுத்து, அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியான வாழ்க்கையை

எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

ஓர் உண்மையாளர் மற்றும் நேர்மையாளரின் உண்மைத்துவத்திற்கான சான்றுகளில் மிகச் சிறந்த சான்று என்னவென்றால், அவருடைய சொந்த மனசாட்சி ஆகும். அது உரக்கக் கூவிச் சொல்கிறது; எதிரிகளையும் ஆதரவாளர்களையும்,தெரிந்தவர் களையும்,தெரியாதவர்களையும், அந்நியர்களையும் ரகசியங்களை அறிந்தவர்களையும் நோக்கி, 'என்னை உற்று நோக்குங்கள்; என்னை பொய்யர் என்று சொல்வதற்கு முன்னால் சற்று சிந்தித்துப் பாருங்கள்! உங்களால் என்னை பொய்யர் என்று சொல்ல முடியுமா? என்னை பொய்யர் என்று கூறுவதால், நீங்கள் எந்த வழிமுறைகளைக் கொண்டு ஒரு பொருளின் உண்மைத்தன்மையைக் கண்டறிவீர்களோ அந்த அனைத்து வழிமுறைகளும் உங்களது கையில் இருந்து சென்றுவிடாதா? என்னை நீங்கள் பொய்யர் என்று தீர்ப்பளித்துவிட்டால், எந்த வாசல்களின் வழியாக நுழைந்து நீங்கள் உங்களின் சரியான இலக்கை அடைந்து வந்தீர்களோ அந்த அனைத்து வாசல்களும் உங்களுக்கு அடைக்கப்பட்டுவிடாதா? இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் ஒரு தொடர்ச்சியை விரும்புகிறது. மேலும் ஒவ்வொரு பொருளும் தனக்கென படிநிலைகளைக் கொண்டுள்ளது. இடைப்பட்ட நிலைகளைக் கைவிட்டுவிட்டு தனது முழுமையான எல்லையை நன்மையும் அடைய முடியாது; அதேபோல் இடைப்பட்ட நிலைகளைக் கடக்காமல் தீமையும் அதன் உச்சத்தைத் தொட முடியாது. அவ்வாறிருக்கையில், மேற்கு நோக்கி ஓடிக்கொண்டிருப்பவர் திடீரென்று தம்மைத் தாமே கிழக்குத் திசையின் தொலைவின் எல்லையில் எப்படி காண முடியும்? ஒருவர் ஒரு திசையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் போது திடீரென மற்றொரு திசையை அடைந்து விடுவது என்பது ஒருபோதும் நடக்க முடியாது;மேலும் தெற்கு நோக்கிச் செல்பவர் வடக்கில் தான் நிற்பதை காண முடியாது.'






'நான் எனது முழு வாழ்நாளையும் உங்களுக்கு மத்தியில் கழித்துள்ளேன்.' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நான் சிறுவனாக இருந்தேன், உங்கள் கைகளிலேயே வளர்ந்து பெரியவனானேன்; நான் இளைஞனாகவும் இருந்தேன்; உங்கள் கைகளிலேயே நடுத்தர வயதை அடைந்தேன். எனது தனிமையான மற்றும் பொதுவான வாழ்க்கையை அறிந்தவர்களும் உங்களுக்கு மத்தியில் உள்ளனர்.எனது எந்தவொரு செயலும் உங்களிடமிருந்து மறைந்திருக்கவில்லை. மேலும் எனது எந்தவொரு சொல்லும் உங்களிடமிருந்து ரகசியமாக இருக்கவில்லை.

நான் எப்போதாவது பொய்யுரைத்தேன் என்று கூறக் கூடிய எவராவது உங்களில் இருக்கின்றாரா?

இந்த அறிவிப்பை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்கின்றார்கள். அதாவது. 'நான் எப்போதாவது பொய் கூறினேன் என்றோ, அல்லது அநீதி இழைத்திருக்கிறேன் என்றோ, அல்லது ஏமாற்றியிருக்கிறேன் என்றோ, அல்லது யாருக்கேனும் துரோகம் செய்திருக்கிறேன் என்றோ அல்லது யாருடைய உரிமையையாவது பறித்திருக்கிறேன் என்றோ, அல்லது எனது சுய பெருமையை விரும்பினேன் என்றோ அல்லது ஆட்சியைப் பெறுவதற்கு முயற்சி செய்தேன் என்றோ உங்களில் யாரேனும் கூற முடியுமா? ஒவ்வொரு களத்திலும் நீங்கள் என்னைச் சோதித்துப் பார்த்திருக்கின்றீர்கள்; ஒவ்வொரு சூழ்நிலையிலும் நீங்கள் என்னை ஆராய்ந்து பார்த்திருக்கிறீர்கள்; ஆனால் எப்போதும் எனது பாதையை நடுநிலையான பாதையாகவே கண்டிருக்கின்றீர்கள்; எப்போதும் என்னை நடுநிலையோடு செயல்படக் கண்டிருக்கின்றீர்கள்'. மேலும் ஒவ்வொரு அழுக்கிலிருந்தும் என்னை தூய்மையானவனாகக் கண்டிருக்கின்றீர்கள்; அதனால் தான் நண்பர்கள் மற்றும் எதிரிகளிடமிருந்து, 'அமீன்' மற்றும் ஸித்தீக்' என்றப் பட்டங்களைப் பெற்றேன்.

அப்படியிருக்கையில், நேற்று மாலை வரை நான் நம்பிக்கைக்குரியவராகவும், உண்மையாளராகவும், நேர்மையாளராகவும் இருந்தேன்; பொய்யிலிருந்து பல மைல் தூரம் நான் விலகியிருந்தேன்; நேர்மையில் என்னை அர்ப்பணித்திருந்தேன்; இன்னும் கூறப்போனால், நேர்மை என் மீது பெருமிதம் கொண்டது. எனது ஒவ்வொரு சொல்லையும் நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள்; ஆனால், இன்று ஒரே நாளில் அப்படி என்ன மாற்றம் ஏற்பட்டுவிட்டது?; ஒரு வாதத்தினால் மட்டும் நான் மோசமானவனிலும் மோசமானவனாகவும், மிக மிக அசுத்தமானவனாகவும் எப்படி ஆகிவிட்டேன்? ' அதுவும் நான் மனிதர்களிடம் ஒருபோதும் பொய்யுரைத்ததில்லை; அல்லது 'இப்போது இறைவனின் மீதும் இட்டுக்கட்டவுமில்லை?' இந்த மாற்றத்திற்கும், இந்த அளவு தலைகீழ் மாற்றத்திற்கும் இயற்கைச் சட்டங்களில் எங்காவது உதாரணம் காணப்படுகிறதா?

இது ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கான விஷயமாக இருந்திருந்தால், அது செயற்கையாக அப்படி செய்யப்பட்டது என்று கூறியிருக்க முடியும். ஒரு வருடம், இரண்டு வருடத்திற்கான விஷயமாக இருந்திருந்தால், எங்களை ஏமாற்றுவதற்காக அவர் இந்த வழிமுறையை மேற்கொண்டிருந்தார் என்று நீங்கள் கூறியிருக்கலாம். ஆனால், எனது வாழ்நாள் முழுவதையும் நான் உங்களுக்கு மத்தியில் கழித்துள்ளேன்; எனது சிறுவர் பருவத்தை நீங்கள் கண்டு விட்டீர்கள்; இளமைப் பருவத்தை நீங்கள் பார்த்து விட்டீர்கள்; முதுமையின் தொடக்கக் காலமான அந்த நடுத்தர பருவத்தையும் உங்களது கண்களுக்கு முன்னால் நான் கழித்துள்ளேன். இந்த அளவு செயற்கைத்தனமும், இந்த அளவு பகட்டு எப்படி சாத்தியமாக இருக்க முடியும்? சிறுவயதில் நன்மை தீமைகளைப் பற்றிய அறிவு எனக்கு இருந்திருக்காதபோது, நான் எப்படி இத்தகைய செயற்கைத்தனத்தைக் கொண்டிருக்க முடியும்? இளமை என்பது ஒரு பைத்தியக்காரத்தனம் போன்றது என்று கூறப்படுகின்றது; அதில் நான் எனது நிலையை ஏமாற்றுத்தனத்தால் எப்படி மறைத்திருக்க முடியும்?

இறுதியாக, சற்று சிந்தித்துப் பாருங்கள்! இந்த ஏமாற்று வேலை எப்போது நடந்தது? யார் செய்தார்? நீங்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் எனது வாழ்க்கை குறைபாடற்றதாகவும், தூய்மையானதாகவும் இருப்பதை மட்டுமே நீங்கள் காண மாட்டீர்கள்; மாறாக, நீங்கள் என்னை நன்மை மற்றும் உண்மையின் வடிவமாகவும் காண்பீர்கள்.

அதாவது உண்மையின் உருவத்தில் காண்பீர்கள். எனவே, சூரியனைப் பார்த்துக் கொண்டே இரவை அறிவிக்காதீர்கள். 'பட்டப் பகலாக இருக்கும்போது பின்னர் அதனை இது இரவு என்று கூறாதீர்கள்.' இந்த வகையில் எனது விஷயங்கள் பட்டப் பகலைப் போல தெளிவாக உள்ளன. மேலும் 'ஒளியின் முன்னிலையில் இருளின் சந்தேகங்களை எழுப்பாதீர்கள். எனது உள்ளத்தைத் தவிர உங்களுக்கு வேறு என்ன சான்று தேவை? எனது உள்ளமே எல்லாவற்றையும் விட பெரிய சான்றாகும்' மற்றும் 'எனது முந்தைய நடத்தையை விட்டுவிட்டு வேறு என்ன ஆதாரத்தை நீங்கள் தேடுகிறீர்கள்? எனது கடந்த காலம் முழுவதும் உங்கள் கண் முன்னே தான் உள்ளது. அப்படியிருந்தும், ஏதேனும் ஒரு சான்றைக் கொண்டு வா' என்று நீங்கள் கூறுகின்றீர்களே!.

' எனது உள்ளமே எனக்கு சாட்சியாகும். எனது வாழ்க்கையே எனக்கு சான்றளிக்கின்றது. உங்களில் ஒவ்வொருவரும் தனது நெஞ்சில் கை வைத்துப் பார்த்தால், அவரது இதயமும், அவரது புத்தியும், இவரிடத்தில் உண்மைத்தன்மை நிலைபெற்றுள்ளது என்று நிச்சயமாக சாட்சியளிக்கும்: மேலும் இது உண்மையைக் கொண்டே நிலைத்திருக்கிறது.

நேர்மை அவர் மீது பெருமிதம் கொள்கிறது; மேலும் அவர் நேர்மையின் மீது

பெருமிதம் கொள்கிறார். இவர் தமது உண்மையை நிரூபிக்க மற்ற விஷயங்களின் உதவியை நாட வேண்டிய அவசியமில்லை; இதன் உதாரணம் சூரிய வெளிச்சமே சூரியனின் வருகைக்குச் சான்றாக இருப்பதைப் போன்றதாகும்.'

அதாவது, சூரிய உதயமே சூரியன் இருப்பதற்கான சான்றாக இருக்கின்றது. இதுவே மிகச் சிறந்த சான்றாகும், இதுதான் அபூ பக்ர் (ரலி) அவர்களின் இதயத்தில் குடி கொண்டு விட்டது; மேலும் இதுவே எப்போதும் உண்மை விரும்பிகளின் இதயங்களில் குடி கொண்டு விடக் கூடிய வலிமை மிக்க சான்றாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த வாதம் செய்த போது, அந்நேரத்தில் அபூ பக்ர் (ரலி) அவர்கள் தமது நண்பரின் இல்லத்தில் இருந்தார்கள். அங்கேயே, அன்னாருடைய ஒரு விடுதலை செய்யப்பட்டிருந்த அடிமைப் பெண்மணி இந்த தகவலைத் தெரிவித்தார்; அதாவது மூஸா (அலை) அவர்களை எத்தகைய நபியாக கூறுகின்றார்களோ அத்தகைய நபியாக ஆகிவிட்டார் தனது கணவர் ஆகிவிட்டார் என்று உங்களுடைய தோழரின் மனைவி கூறுகின்றார்.

அன்னார் (ரலி) அப்பொழுதே எழுந்து, இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இல்லத்திற்குச் சென்று விட்டார்கள். மேலும், 'நான் அல்லாஹ்வின் தூதராவேன்' என்று தாங்கள் (ஸல்) கூறினீர்களா? என்று அன்னாரிடம் இதைப் பற்றி விசாரித்தார்கள். 'ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களின் இந்தக் கூற்றை செவியுற்று, 'ஹஸ்ரத் அபூபக்ரே! ஆம்! நான் அல்லாஹ்வின் தூதராவேன்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.' ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) இந்த வார்த்தையைக் கேட்ட உடனேயே, அன்னாருடைய வாதத்தை ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

ஆக, இறைத் தூதர் (ஸல்) அவர்களும் அன்னாருடைய ஈமானைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

'......நான் எவரை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தாலும், அவரின் தரப்பிலிருந்து ஏதேனும் ஒரு தயக்கமும், யோசனையும், தடுமாற்றமும் வெளிப்பட்டது. ஆனால், அபூபக்ர் முன் இஸ்லாம் முன்வைக்கப்பட்ட போது, அவர் முற்றிலும் எந்தவொரு தயக்கமும் காட்டவில்லை, மாறாக, அவர் சுயமே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு விட்டார்.'

எந்தவொரு அடையாளத்தையும் பார்க்காமலேயே, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்ளும்படி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நிர்பந்தித்த அந்த விஷயம் எதுவாக இருந்தது?

இது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் பேசும் ஆன்மாவாக இருந்தது. அது தனது உண்மைத்தன்மைக்குத் தானே சாட்சியாக இருந்தது......'

இதே போன்று, ஹஸ்ரத் கதீஜா (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) ஆகியோரின் சாட்சியத்தைப் பற்றி நான் ஏற்கனவே கூறிவிட்டேன். இவர்கள் அனைவரும் அன்னாருடைய உண்மையைக் கண்டு அன்னாருடைய இந்த விஷயத்திற்கு சாட்சிகளாக இருந்தனர்.

'சுருங்கக் கூறின், நபியின் உண்மைத்துவத்திற்கான முதல் மற்றும் உள்முகச் சான்று, அவரது நஃப்ஸ் ஆக இருக்கின்றது. அது எப்போதும் அவரது உண்மைத்தன்மைக்கு சாட்சியாக இருக்கிறது. மேலும், அதன் சாட்சியம் எவ்வளவு வலிமையானது என்றால், அதன் முன்னிலையில் வேறு எந்தவோர் அற்புதமோ அல்லது அடையாளமோ தேவைப்படுவதில்லை.' (தஃவத்துல் அமீர், அன்வாருல் உலூம், பாகம் 07, பக்கம் 425 முதல் 428 வரை)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் வேதத்திலிருந்து என்ன அறிய முடிகிறது என்றால், இறையச்சம் உடையவர்கள் யாரெனில், அவர்கள் கண்ணியத்துடனும், பணிவுடனும் வாழ்பவர்கள் ஆவர். அவர்கள் ஆணவத்துடன் உரையாடுவதில்லை. எளியவர் பெரியவர்களிடம் உரையாடுவதைப் போலத்தான் அவர்களின் உரையாடல் இருக்கும்.

எதன் மூலம் நமது வெற்றி நிகழுமோ (அதாவது வாய்மை எனும்) அதனையே நாம் எல்லா நிலைமைகளிலும் மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ் எவருக்கும் சொந்தக்காரன் அல்லன்; அவன் இறையச்சத்தை மட்டுமே விரும்புகிறான். யார் இறையச்சத்தைக் கடைப்பிடிக்கிறாரோ, அவர் மிக உயர்ந்த நிலையை அடைவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ அல்லது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களோ எந்தவொரு பரம்பரை சொத்திலிருந்தும் இந்த கண்ணியத்தைப் பெறவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மதிப்பிற்குரிய தந்தை ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் இணைவைப்பாளராக இருக்கவில்லை என்பது நமது நம்பிக்கையாகும் என்றபோதிலும், மக்கள் இந்த கேள்வியையும் எழுப்புகின்றனர். அதற்கும் அன்னார் (அலை) பதிலளித்துள்ளார்கள்:

நம்முடைய நம்பிக்கை என்னவென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்குரிய தந்தை இணை வைப்பாளராக இருக்கவில்லை, ஆனால், இறைவன் அவருக்கு நபித்துவத்தை வழங்கவில்லை. நபித்துவமோ இறையருளாகும். அவரின் இயல்பில் இருந்த அந்த உண்மைத்தன்மையானது காரணியாக இருந்தது. மேலும், இதுவே அந்த அருளுக்கு உந்துசக்தியாக இருந்தது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள், 'அபுல் அன்பியா' (நபிமார்களின் தந்தை) ஆவார்கள்; அன்னார் தமது உண்மைத்தன்மை மற்றும் இறையச்சத்தினாலேயே, தமது மகனை குர்பானி கொடுக்கவும் தயங்கவில்லை; தாமும் நெருப்பில் போடப்பட்டார்கள்.' நெருப்பிலும் இதே விஷயத்திற்காகவே விழுந்தார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'நம்முடைய தலைவரும், எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மைத்தன்மை மற்றும் நன்றியுணர்வைப் பாருங்கள்! அன்னார் (ஸல்) எல்லா வகையான தீய இயக்கங்களையும் எதிர்த்து நின்றார்கள். பலதரப்பட்ட துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்தார்கள், ஆனால், அதனை பொருட்படுத்தவில்லை. இதே உண்மை மற்றும் நன்றியுணர்வின் காரணமாகவே அல்லாஹ் அருள் செய்தான்.'

இதன் காரணமாகவே அல்லாஹ் கூறினான்:

إِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ
يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا

'நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். வானவர்களும் (இவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் பொழியுமாறும், சாந்தியும், சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள். (அல்-அஹ்ஸாப்: 57)

இந்த வசனத்திலிருந்து தெளிவாவது என்னவென்றால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் அமல்கள் எத்தகையதாக இருந்தனவென்றால், அல்லாஹ் அன்னாரின் புகழையோ அல்லது பண்புகளையோ வரையறுப்பதற்கு எந்த ஒரு குறிப்பிட்ட வார்த்தையையும் கூறவில்லை, 'அவற்றை ஒரு சில குறிப்பிட்ட வார்த்தைகளுக்குள் வரையறுக்கவில்லை'. வார்த்தைகள் கிடைத்திருக்கும். ஆனால், அவனே பயன்படுத்தவில்லை. அதாவது, அன்னாருடைய நற்செயல்களுக்கான பாராட்டு எந்தவொரு வரையறைக்கும் அப்பாற்பட்டதாக இருந்தன. 'நற்செயல்கள்' என்பவை எத்தகையதாக இருந்தன என்றால், நாம் அவற்றை எல்லைக்குள் சுருக்க முடியாது. இந்த வகையான வசனம் வேறு எந்த நபியின் மேன்மைக்காகவும் பயன்படுத்தப்படவில்லை. அன்னாருடைய ஆன்மாவில் எத்தகைய உண்மைத்தன்மையும்,

தூய்மையும் இருந்தது என்றால், மேலும் அன்னாருடைய செயல்கள் அல்லாஹ்வின் பார்வையில் எவ்வளவு விருப்பத்திற்குரியவையாக இருந்தனவென்றால், எதிர்கால மக்கள் நன்றி செலுத்தும் விதமாக ஸலவாத்து ஓத வேண்டும் என்று அல்லாஹ் நிரந்தரமாக இந்தக் கட்டளையை வழங்கினான். அன்னாரின் மன உறுதியையும், உண்மைத்தன்மையையும் நாம் மேலோட்டமாகவோ அல்லது ஆழமாகவோ பார்த்தாலும், அதற்கு நிகரான ஒன்றை நாம் காண முடியாது.

மஸீஹ் அவர்களின் மன உறுதி அல்லது உண்மை மற்றும் தூய்மையின் தாக்கம் அன்னாரை பின்பற்றுபவர்கள் மீது எந்த அளவிற்கு ஏற்பட்டது என்பதை அருடைய காலத்தை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

ஒரு தவறான பழக்கத்தை மாற்றுவது எவ்வளவு கடினமானது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள முடியும். ஆழமாக பதிந்து விட்ட பழக்கவழக்கங்களை விட்டொழிப்பது என்பது இயலாத ஒன்றைப் போன்றதாகும்.

பழக்கவழக்கங்கள் பழகிவிட்டால், அவற்றைச் சீரமைப்பது மிகவும் கடினமான காரியமாகும். ஆனால், நம்முடைய பரிசுத்த நபி (ஸல்) அவர்களோ, மிருகங்களை விடவும் மிக மோசமாக வாழ்ந்து கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மனிதர்களைச் சீர்திருத்தினார்கள். சிலர் மிருகங்களைப் போல தாய்களிடமும், சகோதரிகளிடம் எந்த வித்தியாசமும் காட்டவில்லை. அனாதைகளின் செல்வங்களைத் தின்றார்கள்; இறந்தவர்களின் சொத்துக்களைத் தின்றார்கள். சிலர் நட்சத்திரங்களை வணங்கினார்கள், சிலர் இறை மறுப்பாளராக இருந்தனர்; சிலர் சிலைகளை வணங்கி வந்தனர்.. அரேபிய தீபகற்பம் என்பது மதங்களின் ஒரு தொகுப்பைத் தனக்குள்ளே கொண்டிருந்தது. இதனால் ஏற்பட்ட மிகப் பெரிய நன்மை என்னவென்றால், திருக்குர்ஆன் எல்லா வகையான போதனைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. உலகில் சாத்தியமான ஒவ்வொரு தவறான கொள்கை அல்லது தவறான போதனையை வேரறுப்பதற்குத் தேவையான போதனைகள் அதில் உள்ளன. இது அல்லாஹ் தஆலாவின் ஆழமான ஞானம் மற்றும் அதிகாரமாகும்.‘ (மல்ஃபூஸாத், பாகம் 1, பக்கம் 31 முதல் 33 வரை, 2022 பதிப்பு)

அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அனுப்பினான். அதுவும் அறியாமை அதன் உச்சக்கட்டத்தை எட்டியிருந்த ஒரு காலக்கட்டத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை, அனுப்பினான். பின்னர் அந்த காட்டுமிராண்டிகளை மனிதர்களாக மாற்றினார்கள்.

اللّٰھم صل علی محمد وعلی اٰل محمد
وبارک وسلم انک حمید مجید

அல்லாஹ் தஆலா நமக்கும் அன்னாருடைய அழகிய முன்மாதிரியைப் பின்பற்றி நடந்தவாறு, திருக்குர்ஆன் மற்றும் அன்னாருடைய கட்டளைகளின்படி செயல்பட்டவாறு உண்மையின் தரங்களை உயர்த்துவதற்கு நற்பேறு வழங்குவானாக! ஆமீன்.

(அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 15 மே 2026, பக்கம் 2 முதல் 8 வரை)

தமிழாக்கம்
முரப்பி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

***** ******

**1 - ம் பக்கத் தொடர்ச்சி (நபிமொழி ).......**

முடியாதோ), அதேபான்று மக்களின் உயிர்களையும், உடைமைகளையும், அவர்களின் கண்ணியத்தையும் அவமதிப்பது முற்றிலும் ஹராம் ஆகும்.

‘அடுத்து, ‘நான் இந்த முக்கியமான தூதுச் செய்தியைச் எட்ட வைத்துவிட்டேனா?’ என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, ‘ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அனைத்தையும் எட்ட வைத்துவிட்டார்கள்’ என்று மக்கள் கூறினர்.

அப்போது அன்னார் (ஸல்) கூறினார்கள்: ‘இங்கு வந்திருப்பவர்கள், இந்தத் தூதுச் செய்தியை இங்கு வராதவர்களுக்கும் எட்ட வைத்துவிடுங்கள்’.

***** ******


## மாணவர் சேர்க்கை
## DaruS Sana’at Qadian
## கல்வி ஆண்டு: 2026-27

## (Ahmadiyya Vocational Training Centre)

தாருஸ் ஸனாஅத் காதியான், ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஒப்புதல் மற்றும் சிறப்பு வழிகாட்டுதலுடன் 2010 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த கல்வி நிறுவனத்தின் முக்கிய நோக்கம், அஹ்மதி மாணவர்களைத் திறமைசாலிகளாக மாற்றுவதும், அவர்களுக்குத் தொழில்நுட்பப் படிப்புகளைக் கற்றுக்கொடுத்து வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும் ஆகும். தாருல் சனாஅத் காதியான், அரசு நிறுவனமான NSIC டெல்லி மற்றும் ISO சான்றிதழ் பெற்ற ஒரு பதிவு செய்யப்பட்ட அமைப்பாகும். இதில் ஓராண்டு கால அளவிலான பின்வரும் படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன:

(1.)Computer applications (2.)Plumbing (3.)Electrician

(4.)Motor vehicle mechanic (5.)Diesel mechanic (6.)Welding

(7.)A.C & Refrigerator

பள்ளிப் படிப்பை முழுமையாக முடிக்க முடியாத அல்லது 8 மற்றும் 10-ஆம் வகுப்பிற்குப் பிறகு தொழில்நுட்பப் படிப்புகளைப் படிக்க விரும்பும் அஹ்மதி இளைஞர்கள், சேர்க்கைக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். அஹ்மதி குழந்தைகளுக்கான மார்க்கக் கல்விக்கும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டு 2026-27 க்கான சேர்க்கை தொடங்கியுள்ளது. இதற்கான வகுப்புகள் 1 ஆகஸ்ட் 2026 முதல் தொடங்கும்

கூடுதல் விபரங்களுக்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்:

darulsanaat.qadian@gmail.com

*9872725895,*8604024043

(முதல்வர், தாருஸ் ஸனாஅத் காதியான்)


### பத்ர் பத்திரிகையை நீங்களும் படியுங்கள்
### உங்கள் நண்பர்களையும் படிப்பதற்கு ஆர்வமூட்டுங்கள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ’ பத்ர் பத்திரிகையின் டிசம்பர் மாதம் 2014-ம் ஆண்டு சிறப்பு இதழுக்காக தமது தூதுச் செய்தியை அனுப்பியவாறு கூறினார்கள் :

‘ பத்ர் நிர்வாகமும் அதன் வாசகர்களும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், இந்தப் பத்திரிகை ஜமாஅத்தின் ஆன்மீக சீர்திருத்தத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தொடங்கப்பட்டது. நம் சான்றோர்கள் அசாதாரணமான சூழ்நிலைகளிலும் முழு அர்ப்பணிப்புடன் இதைத் தொடர்ந்து நடத்துவதற்காக பாடுபட்டனர். அவர்களின் துஆக்கள் மற்றும் தூய முயற்சிகளின் அருளினால் தான் இது இன்று வரை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. எனவே, அதிகப்படியான அஹ்மதிகள் இதைப் படித்துப் பயனடைய வேண்டும் என்பது இதன் தேட்டமாகும். அல்லாஹ் தன் அருளால், குறிப்பாக இந்தியாவில் வசிக்கும் அஹ்மதிகளுக்கும், பொதுவாக உலகின் பிற பகுதிகளில் வசிக்கும் அஹ்மதிகளுக்கும் இதைப் படிக்கவும், இதனுடன் தொடர்புடைய அருட்களைப் பெற்றுக் கொள்ளவும் நற்பேறு வழங்குவானாக! ஆமீன்!

‘ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் ஞானம் நிறைந்த அறிவுறுத்தலைக் கருத்தில் கொண்டவாறு, அஹ்மதியா ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு விடுக்கப்படும் வேண்டுகோள் என்னவென்றால், ஒவ்வொரு குடும்பத்திலும் 'பத்ர் பத்திரிகையை' தொடர்ந்து வாசிப்பதை உறுதி செய்வது மிகவும் அவசியமாகும்.

பத்ர் பத்திரிகைகளில் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் போதனைகள் மட்டுமின்றி, ஹுஸூர் அன்வர் அவர்களின் குத்பா பேருரைகள், உரையாடல்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் ஹுஸூர் அன்வர் அவர்கள் மேற்கொள்ளும் அருளுக்குரிய சுற்றுப் பயணங்களின் சுவாரசியமான மற்றும் ஈமானை வலுவூட்டக்கூடிய அறிக்கைகள் போன்றவை வெளியாகின்றன. இதனைப் படிப்பது ஒவ்வொரு அஹ்மதிக்கும் அவசியமானதாகும். (நிர்வாகம்)

***** ******

2-ம் பக்கத் தொடர்ச்சி...

ஒருவருக்கொருவர் நெருங்கச் செய்யும் நடைமுறை ஆகிய இந்த வழிமுறைகள் மூலமே இந்த ஜமாஅத் அமைதியை ஊக்குவிக்கிறது.

மேலும் அவர் கூறினார்: அமைதிக்கான அடித்தளம் என்பது நமது அன்றாட வாழ்க்கையில் நாம் ஒருவருக்கொருவர் எவ்வாறு பழகுகிறோம்? என்பதில் மறைந்துள்ளது. நம்முடைய உள்ளூர் மக்களிடையே நம்மால் அமைதியை நிலைநாட்ட முடியாவிட்டால், உலக அளவில் அமைதிக்கான முயற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் எஞ்சிருக்காது. நிலையான அமைதி என்பது ஒருவரையொருவர் சகித்துக்கொள்வதால் மட்டும் ஏற்பட்டுவிடாது; மாறாக அது தொடர்ச்சியான தொடர்புகள் மற்றும் பரஸ்பர புரிதலின் மூலம் வளர்கிறது. நான் குறிப்பாக ஹுஸூர் அன்வர் அவர்களின் பங்களிப்பைக் குறிப்பிட விரும்புகிறேன். அன்னாருடைய அமைதி, நீதி மற்றும் பரஸ்பர மரியாதைக்கான நிரந்தர தூதுச் செய்தி இந்த ஜமாஅத்தைக் கடந்து உலகம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

Sir Ed Davey MP, Hon.Rt

இவர் கூறினார்: இந்த கருத்தரங்கிற்கு நான் அழைக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு கிடைத்த ஒரு பெரும் கௌரவம் ஆகும். அனைத்து விருந்தினர்கள் சார்பாகவும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது நாட்டில் அல்லது உலகில் அமைதிக்காக இவ்வளவு தொடர்ச்சியாகவும், உறுதியாகவும் குரல் எழுப்பக் கூடிய மற்றும் அனைத்து மதத்தினரையும் மட்டுமல்லாமல் மதத்தைச் சாராதவர்களையும் கூட ஒரே இடத்தில் இணைத்து, அவர்கள் ஒருவருக்கொருவர் கலந்துரையாடக்கூடிய ஒரு சூழலை உருவாக்கும் வேறு எந்தவொரு ஜமாஅத்தையும் நான் அறிந்ததில்லை. இது நமக்கும் மற்ற நாடுகளுக்கும் இடையே அமைதியை நிலைநாட்டுவதற்கு மிகவும் அவசியமானதாகும். ஹுஸூர் அன்வர் அவர்கள் உலகளாவிய தலைவராக விளங்குகிறார்கள். அன்னார் எல்லாவற்றையும் விட அமைதிக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள்.

Seema Malhotra
MP for Feltham and Heston

இவர் கூறினார்: மோதல்களைத் தடுப்பதற்கும், இன்னும் அதிக வளமான மற்றும் அமைதி நிறைந்த சமூகத்தை உருவாக்குவதற்கும் சமூக அமைப்புகள், மார்க்க அமைப்புகள் மற்றும் குடிமைத் தலைவர்கள் என அனைவரும் மிக முக்கியப் பங்காற்றுவதை நாம் காண்கிறோம். இதன் மூலம் மக்களுக்கும், சமூகங்களுக்கும் இடையே பரஸ்பர புரிதலை அதிகரித்து, மக்களை ஒருவர் மற்றொருவருடன் நெருங்கச் செய்ய முடியும்.

எனவே நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சேவைகளையும், மேலும் இது தொடர்பான ஹுஸூர் அன்வர் அவர்களின் தலைமையையும் நான் பாராட்டுகிறேன். அதை நான் கடந்த பல ஆண்டுகளாக அருகில் இருந்து பார்த்துள்ளேன். அமைதி, நீதி மற்றும் மனித கண்ணியத்திற்கான தங்களின் தொடர்ச்சியான குரல் உலகம் முழுவதும் உள்ள மக்களின் இதயங்களில் எதிரொலித்து வருகிறது.

உக்ரைன் மற்றும் காஸாவில் நடக்கும் போரின் கொடூரங்களை நாம் கண்டுள்ளோம். நாம் அதிகரித்து வரும் பதற்றங்களை பார்த்துள்ளோம். சமீபத்தில் ஈரான் மோதலையும் பார்த்திருக்கிறோம். போர் என்பது நமது தலைமுறையின் அடையாளமாக மாறுவதற்கு நாம் அனுமதிக்கவும் முடியாது; அனுமதிக்கவும் கூடாது. இன்னும் கூறப்போனால், இதற்கு நேர்மாற்றமாக அமைதியே நமது பாரம்பரியமாக மாற வேண்டும்.

இன்றைய நிகழ்ச்சியில் என்னை அழைத்ததற்கும், மேலும் மனிதகுலத்திற்கான சேவை மற்றும் நிலையான அமைதியை நிலைநாட்டுவதற்கான தங்களின் அனைத்து வகையான முயற்சிகளுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி. இன்று இந்தக் கருத்தரங்கில் உங்களுடன் கலந்து கொண்டிருப்பது எனக்குக் கிடைத்த பெருமையாகும். நன்றி.

**அமைதி கருத்தரங்கம் மற்றும் ஹுஸூர் அன்வர் அவர்களின் உரை குறித்து சில முக்கிய விருந்தினர்களின் கருத்துக்கள்**

அமைதி கருத்தரங்கம் தொடர்பாக ஜமாஅத் நிர்வாகத்தினர் மற்றும் சில முக்கிய விருந்தினர்களின் கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

மரியாதைக்குரிய ரஃபீக் அஹ்மது ஹயாத் ஸாஹிப் (அமீர் ஜமாஅத் அஹ்மதிய்யா யூ.கே) அவர்கள், அல்-பஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகையின் நிருபருக்கு பேட்டி வழங்கியவாறு கூறினார்கள்:

தற்போது உலகில் பல்வேறு பகுதிகளில் போர்களும், கொலைகளும், கொள்ளைகளும் நடக்கின்றன. இதன் காரணமாக மக்கள் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக காஸா, லெபனான், சூடான் மற்றும் ஆஃப்கானிஸ்தான் போன்ற பகுதிகளில் நிலைமைகள் மிக மோசமாக உள்ளன. கடந்த பல ஆண்டு கால முயற்சிகளுக்குப் பிறகும் போர்களினால் எந்தவொரு உண்மையான நன்மையும் விளையவில்லை. இன்னும் கூறப்போனால், அது வெறும் இழப்பு மற்றும், அழிவிற்கு மட்டுமே காரணியாகியுள்ளது.

அமீர் ஸாஹிப் மேலும் கூறுகையில், தலைவர்கள் தங்கள் ஈகோவைக் கைவிட்டு விட்டு, ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் அமைதி மற்றும் மனிதநேய தூதுச் செய்தியைப் பற்றி சிந்திப் பார்த்தால், உலகில் சிறந்த அமைதியை நிலைநாட்ட முடியும். அன்னார் கூறினார்கள்: சில உலகத் தலைவர்கள் போர்களுக்கு பொருளாதார அல்லது அரசியல் உதவி வழங்குவதைப் பற்றி பேசுகின்றனனர்; ஆனால், அசல் தேவை என்னவென்றால், போர்களை முடிவுக்குக் கொண்டு வந்து நிலையான அமைதியை நோக்கி செயல்ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

கருத்தரங்கின் விளம்பரம் குறித்து அமீர் ஸாஹிப் பேசுகையில், இது சமூக ஊடகங்களின் காலமாகும். சமூக ஊடகங்கள் மூலம் கோடிக்கணக்கான மக்களை தூதுச் செய்தி சென்றடைந்து விடுகிறது என்று கூறினார்கள்.

கருத்தரங்கில் 'கிலாஃபத்தின் இருப்பு மற்றும் தனித்துவம் குறித்து அமீர் ஸாஹிப் கூறுகையில், இதனால் தான் இந்த நிகழ்வுக்கு இவ்வளவு பெரிய முக்கியத்துவம் கிடைத்துள்ளது. பல நாடுகளில் இருந்து விருந்தினர்கள் வந்துள்ளனர், அமைச்சர்களும் வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரு நல்ல செய்தியைத் தங்களோடு எடுத்துச் செல்வார்கள். பெரிய நாடுகள் தங்களின் முன்மாதிரியான நடத்தையைக் காட்டுவது தொடர்பாக கூறினார்கள்: பெரிய உலகத் தலைவர்கள் அமைதியை நோக்கி செல்லாத வரை, சிறிய நாடுகளும் அவர்களை பின்பற்றி செல்லத் தொடங்குகின்றனர்.

மக்ஃரூம் ஃபரீத் அஹ்மது ஸாஹிப், அஹ்மதிய்யா ஜமாஅத் யூ.கே-வின் வெளியுறவுத் துறைச் செயலாளர்:

தேசிய அமைதி கருத்தரங்கின் கடந்த 20 ஆண்டு கால வளர்ச்சி மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து மக்ஃரூம் ஃபரீத் அஹ்மது ஸாஹிப் கூறினார்கள்:

இந்த நிகழ்வு வெறும் எண்ணிக்கையில் மட்டுமே அதிகரிக்கவில்லை, மாறாக, அதன் தூதுச் செய்தியும், தாக்கமும் அதிகரித்துள்ளது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொள்கிறார்கள். மேலும் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அமைதி, மனிதநேயம் மற்றும் அனுதாபம் சார்ந்த தூதுச் செய்தியிலிருந்து வழிகாட்டுதலைப் பெறுகிறார்கள்.

MTA மூலமாக இந்த தூதுச் செய்தி உலகம் முழுவதையும் சென்றடைகிறது; உலக அளவில் அமைதியை மேம்படுத்துவதற்கான ஒரு வலுவான ஊடகமாக இந்த நிகழ்வு மாறி வருகிறது. இன்றைய காலகட்டத்தில் மோதல்கள் இன்னும் அதிகமாக வெளிப்பட்டு வருகின்றன. எனவே ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் முன்பை விட அதிகம் தெளிவாகவும், நேரடியான முறையிலும் அமைதி மற்றும் மனிதநேயத்திற்கு ஆதரவாக குரல் எழுப்பி வருகின்றார்கள்.

கிளையர் டெஸ்மண்ட்,
Christian Solidarity

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)

A. Khaleel Ahmad
(Melapalayam)

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த TOLL FREE எண்ணில்
ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 18 JUNE 2026 Issue No. 25

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

Worldwide:

இந்த நிகழ்வு, ஒரு பொதுவான நோக்கத்திற்காக பல்வேறு பின்னணிகளைக் கொண்ட மக்களை ஓர் ஒன்றுபட்ட நோக்கத்திற்காக ஒன்றிணைப்பதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாக நிரூபணமாகியுள்ளது. இங்கு பல்வேறு கருத்துக்களைக் கேட்பதற்கும், குறிப்பாக கண்ணியத்திற்குரிய ஹுஸூர் அன்வர் அவர்களின் உரையாடலில் இருந்து வழிகாட்டுதலைப் பெறுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. அமைதிக்காக உலகத் தலைவர்களை மட்டுமே சார்ந்திருக்க முடியாது; மாறாக, ஒவ்வொரு தனி நபரும் தனது சமூகத்திலும், தனக்கு இருக்கும் செல்வாக்குள்ள வட்டத்திலும் தனது பங்கை ஆற்ற வேண்டும் என்பதுதான் மிக முக்கியமான பாடமாகும். இன்றைய கடினமான சூழ்நிலைகளில் இதுபோன்ற நிகழ்வுகள் நம்பிக்கை, தைரியம் மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்துகின்றன. மேலும் மக்களுடனான சந்திப்புகளும், உரையாடல்களும் மிகுந்த தாக்கத்தையும், ஊக்கத்தையும் உணரச் செய்கின்றன. எனவே நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள், இதுவே அமைதியைக் கொண்டுவரும்.

'Women's Wellbeing' என்ற அமைப்பை லிண்டா ஸ்டீபன்ஸ் ஸாஹிபா என்பவர் நடத்தி வருகிறார்:

இவர் பெண்களின் ஆரோக்கியம், மாதவிடாய் நிறுத்தத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய காலம் (pre and post-menopause) மற்றும் தாயானதற்கு முந்தைய மற்றும் பிந்தைய பராமரிப்பு ஆகியவற்றில் முக்கியமாகப் பணியாற்றுகிறார்கள். Vaughan James Pharmacy-யுடன் தொடர்புடைய ஊழியர்களை இங்கு அழைத்து வந்ததாக அவர் கூறினார். மேலும் அவர்களும் இதற்கு முன்பு இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர். அவரைப் பொறுத்தவரை, இந்த முறை அனுபவம் மிகவும் சிறப்பானதாக இருந்தது. ஏனெனில் அவர் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் உரையாடலில், சூழலில் இருந்த அமைதி, அன்பு மற்றும் பரஸ்பரத் தொடர்பின் உணர்வை மிகவும் ஆழமாக உணர்ந்தார். உலகம் தற்போது உலகப் போர் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

எனவே மனிதநேயம், ஒற்றுமை மற்றும் அமைதிக்கான தூதுச் செய்தி மிகவும் அவசியமானது என்று அவர் கூறினார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முயற்சிகளைப் பாராட்டிய அவர், இங்கு பரஸ்பர அன்பு, குடும்ப மதிப்புகள், பல்வேறு மதங்களின் மீதான மரியாதை மற்றும் உலகளாவிய சகோதரத்துவத்தின் நடைமுறைக்கான உதாரணம் காணப்படுகிறது என்றும், இந்த நிகழ்வில் பங்கேற்பதை தனக்கு கிடைத்த நற்பேறாகவும், அருளாகவும் கருதுவதாகவும் கூறினார்.

**கேத்தரின் கிளார்க், ஒயிட்ஹில் அண்ட் போர்டன் கவுன்சிலர், மற்றும் அலெக்ஸ் பேஜ், ஒரு சமூக மற்றும் பொது பிரச்சாரகர்:**

இவர் இந்த நிகழ்வின் முக்கியத்துவம் குறித்துப் பேசுகையில், (யூ.கே) இஸ்லாமாபாத்தில் நடைபெறும் இதுபோன்ற நிகழ்வுகள் உள்ளூர் மற்றும் சர்வதேச சமூகங்களை நெருக்கமாகக் கொண்டு வருவதற்கும், பரஸ்பர அன்பு மற்றும் மரியாதையை மேம்படுத்துவதற்கும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்று கூறினார். பல்வேறு பின்னணிகளைக் கொண்ட மக்கள் ஒரே இடத்தில் அமர்ந்து பேசுவது தவறான புரிதல்களை நீக்குகிறது. மேலும் ஒருவருக்கொருவர் பலம் மற்றும் பலவீனங்களைப் புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது. உலக அளவில் அமைதிக்காக உரையாடல்களும், உறவுகளும் அவசியம் என்று அவர்கள் வலியுறுத்தினர். ஏனெனில் மக்கள் ஒருவரையொருவர் எவ்வளவு அதிகமாகப் புரிந்து கொள்கிறார்களோ, அவ்வளவு குறைவாகவே மோதல்கள் இருக்கும். இரு விருந்தினர்களும் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் உரையால் மிகவும் ஈர்க்கப்பட்டதாகக் கூறினர். அதே நேரத்தில் கவுன்ஸிலர் கேத்தரின் கிளார்க், தனக்கு தனிப்பட்ட முறையில் சந்திக்கும் நற்பேறு கிடைத்ததாகவும், அதை ஒரு மறக்க முடியாத அனுபவம் என்றும் கூறினார்.

**ஜில் பார்ஸ்டோ - சர்ச் ஆஃப் ஜீசஸ் கிரைஸ்ட் ஆஃப் லேட்டர்-டே செயிண்ட்ஸ், கன்வீனர் இன்டர்ஃபெய்த் மில்டன் கீன்ஸ்:**

கண்ணியத்திற்குரிய ஹுஸூர் அன்வர்) அவர்களின் உரை மிகவும் ஈர்க்கக்கூடியதாக இருந்தது. உலகின் பல்வேறு பகுதிகளின் நிலவரங்கள் குறித்து அன்னாருக்கு ஆழமான விழிப்புணர்வு இருப்பதும், அன்னாரது பார்வை மிகவும் பரந்தது என்பதும் தெளிவாகத் தெரிந்தது. ஒரு மதத் தலைவரின் நாவிலிருந்து போர்கள், மோதல்கள் மற்றும் அமைதியின் முக்கியத்துவம் குறித்து இவ்வளவு தைரியத்துடனும், இரக்கத்துடனும் கேட்பது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இது உண்மையிலேயே ஓர் ஆன்மிக நிகழ்வாகும்.

சாரா டே (சாரா டே) - நியூஃபோர்ட் பாக்னல் நகர மேயர் (Mayoress of Newport Pagnell): நான் ஹுஸூர் அவர்களின் உரையின் போது தொடர்ந்து தலையசைத்துக் கொண்டிருந்தேன். ஏனெனில் எனக்கு ஒவ்வொரு வார்த்தையிலும் உடன்பாடு இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு கண்ணியத்திற்குரிய ஹுஸூர் அன்வர் அவர்கள் ஆற்றிய உரையும் எனக்கு நினைவுக்கு வந்தது. **அன்னார் இந்த விஷயங்களை நீண்ட காலமாக கூறி வருகின்றார்கள். ஹுஸூர் அவர்களின் மேன்மை என்னவென்றால், 'நான் முன்பே எச்சரித்திருந்தேன்' என்று அன்னார் கூறுவதில்லை. ஆனால், உண்மை என்னவென்றால், அன்னார் உண்மையிலேயே முன்பே எச்சரித்திருந்தார்கள்.** இன்றும் அதை மீண்டும் செய்துள்ளார்கள். அன்னார் கூறியவை அனைத்தும் இப்போது நம் கண்முன்னே நடந்து கொண்டிருக்கின்றன அல்லது நடக்கவிருக்கின்றன. அதை நினைத்தால் பயமாக இருக்கிறது, ஆனால் இந்த உரை மிகவும் பயனுள்ளதாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தது.

அல்-பத்ர் பத்திரிகை நிர்வாகம் ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுஹ்) மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத் யூ.கேவிற்கு இந்த அமைதி கருத்தரங்கை வெற்றிகரமாக நடத்தியதற்காக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அருளுக்குரிய மற்றும் அமைதியான குரலுக்கு செவிசாய்க்கும் நற்பேறை அல்லாஹ் உலகிற்கு வழங்க வேண்டும் என்றும், உலகை அமைதி மற்றும் பாதுகாப்பின் பூங்காவாக மாற்ற வேண்டும் என்றும் துஆ செய்கிறது. அல்லாஹும்ம ஆமீன்!

(நன்றி: அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 23 மே 2026) தமிழாக்கம்

முரப்பி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad